உ

கடவுள் துணை.

# நீதி நூல்

தஞ்சாவூர்ச்சில்லா
மாயூரந்தாலூக்கா
முன்சீப்
மகாகனந்தங்கிய ம-ா-ா-ஸ்ரீ
ச. வேதநாயகம் பிள்ளையவர்கள்
இயற்றியது.

---

இஃது
இந்நூலாசிரியர்
[illegible] ம-ா-ா-ஸ்ரீ
வ. சொக்கலிங்க [illegible]ரவர்கள்
[illegible]
மூலநூலில் உத்தரவு [illegible]படி [illegible]யாரால்
சென்னை
வி. ஜெ. மாணிக்கவேலு முதலியார்
அவர்களது
(ஜீவி. பிரஸ்) என்னும் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

தாரண௵ சித்திரைமீ

---

(Registered Copy Right.)

கடவுள் துணை.

# நீதி நூல்.

---

தஞ்சாவூர்ச் சில்லா
மாயூரந் தாலூகா
முன்சீப்
மகாகனந்தங்கிய ம-ா-ா-ஸ்ரீ
ச. வேதநாயகம் பிள்ளையவர்கள்
இயற்றியது.

---

இஃது
இந்நூலாசிரியர்
பிறையாறு ம-ா-ா-ஸ்ரீ
வ. சொக்கலிங்க நாடாரவர்க
ளிடத்தில்
முகதாவில் உத்தரவு கொடுத்தபடி ஷை யாரால்
சென்னை
வி. ஜே. மாணிக்கவேலு முதலியார்
அவர்களது
(ஜரிஷ் பிரஸ்) என்னும் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

தாரண௵ சித்திரை௴

---

(Registered Copy Right.)

# சாற்றுக்கவிகள்.

ம-௱-௱-ஸ்ரீ,

திரிசிரபுரம் - மகாவித்துவான்,

## மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களியற்றியது.

### ஆசிரியப்பா.

மலர்தலையுலகி னலர்பலவுயிரு
மறமுதலொருநாற் றிறமுமெளிதடையத்
தெய்வமுண்டென்று தெளிதரன்முன்வைத்
தஃதுணர்ந்தார்க்கே யத்தேவியல்பும்
வாழ்த்துமுணர்ந்தியற்ற மனமுறுமாதலி
னதுபின்னுறவமைத் தரசர்தநீதி
தெய்வநீதியே சிவணுமாதலிற்
பின்னதுநிறுவிப் பெரும்பூம்பால
ரியல்பொடுபிரியா தியலுந்தன்மையிற்
குடிகளதியல்பு குறித்ததன்பின்னமைத்
தியல்புறத்தழீஇய விருங்குடிக்கல்லது
ஞானசாரிய னண்ணுறாதலி
னனையவன்பெருமை யனையதன்பின்னமைத
தியலாசிரிய னியலுணர்ந்தார்க்கே
பொய்யாசிரியன் புன்மைதோன்று
மாதலினவனியலதன் பின்னுறநிறீஇ
யாரியனியல்போர்ந் தடுப்பார்க்கன்றித்
தந்தைதாய்வணக்கந் தகாமையினஃததன்
பின்னுறநிறுவிப் பெற்றியின்வணங்கு

மைந்தருக்கனையார் மகிழ்ந்தாற்றுதலிவை
யென்றுநூல்கற்பித் திடுதல்வளர்த்தன்
மற்றதன்பின்வைத் துற்றுழியுதவல்
கல்வியேயாதலிற் காமருமாதரு
முணருமாறதன்பின் னுறவஃதுறுத்திக்
கற்றோர்க்கன்றி மற்றோர்க்கியலா
தென்பதுதோன்ற விருஞ்சகோதரரியல்
பன்புறவதன்பி னமைதரநாட்டி
யுடன்பிறந்தாரொழுக் குறுமில்லறத்திற்
கின்றியமையா தென்பதுதோன்றக்
கிழவன்கிழத்தி யியலதன்பின்வைத்
தியலுறுகிழத்தி யியலுணர்ந்தார்க்கே
யவண்மறுதலையா மணங்கினடையுணர
வருமதனலது மற்றதன்பின்வைத்
திவ்வாறொழுகு மியல்புடையுயர்ந்தோர்
தாழ்ந்தோர்த்தாங்கலுந் தாழ்ந்தோருயர்ந்தோர்க்
கடங்கியொழுகலு மறனெனவதன்பின்
னென்றன்பின்ன ரொன்றுறநிறுவி
யடங்கியொழுகுநர்க் ககலும்பொய்மை
பொய்நின்றகலப் போமேகளவுங்
களவுநீங்கக் கைவிடுங்கொலையுங்
கொலையதுதொலையக் குலைதருமதுவு
மதுக்குடியகல மாறுஞ்சூதுஞ்
சூதுநீங்கப்பரி தானர்தொலையும்
பரிதானமகலப் படுபுறங்கூறலும்
புறங்கூறலொழியப் போம்பெரியோரைத்
தூற்றலுமஃதறத் தொலையுமுலோப்மு
முலோபநீங்க வொழியுஞ்சோம்பலுஞ்
சோம்பனீங்கத் தொலைதருஞ்சினமுஞ்



சினமதுதீரச் சிதையும்பொறாமையு
மென்பதுதோன்ற விவையெலாமதன்பி
னென்றன்பின்ன ரொன்றுறவமைத்துப்
பொறாமையொழிந்த புண்ணியர்க்கல்லது
கல்விச்செருக்குங் காரிகைச்செருக்குஞ்
செல்வச்செருக்குஞ் சேராவென்பதற்
கதன்பினெவ்வொன்று வடைவுறநிறுவிச்
செருக்கொழிந்தவரே தீயரைச்சேரா
ரென்பதுதோன்ற வதன்பினிணைத்துத்
தீச்சார்பிலார்க்கே செறிபிழைபொறுத்த
லினியசொற்கழற லியலும்பிறர்க்குத்
தீங்குசெய்யாமை செறியுமென்றதன்பின்
முறையொரோவொன்று முயங்குறவைத்து
நினையுமிந்நெறியோர் நெடுந்துயிலுறப்ப
ருரைக்குமதறப்பே ருண்டியுமொழியும்
புகலஃதறத்தற் புகழ்தலுமொழியு
மிஃதறுதெனிற்புக ழிகழ்மதியாமை
யுண்டாமென்றற் கொன்றன்பின்ன
ரொன்றுறவதன்பி னுறுமுறைநாட்டிப்
புகழிகழ்மதிக்கும் புண்ணியர்தமக்கே
பரோபகாரம் பலிக்குமென்றுணர
வதன்பினிறுவி யத்தகையோரே
பொருளவாவொழிவரப் புண்ணியர்தமக்கே
மெய்நிலையாமையும் வெளிப்படுமவர்க்கே
துன்பப்பகுதியுந் தோன்றிடுமவர்க்கே
யறஞ்செயுந்திறமுண் டாமவர்தாமே
கணிகையரியல்பு கழிப்பரென்றுணர
விவைமுறையதன்பி னியைதரநாட்டிக்
கரைதருமினையர் கமுகந்தோட்ட

மென்றூற்போல வியல்விலங்கினத்துக்
கிடர்செயாரெனல்பி னியைதரவமைத்து
நன்னெறிபலவு ண்விலாடதங்கப்
பன்னெறியென்பது கடையுறப்பகீத்து
நீதிநூலென்றோர் நிலவுபெயரிட்டுத்
திருமாறந்த தெள்ளமுதொப்ப
யாவருமுவப்ப வினிதினியற்றித்
தந்தனனொருநா றவலருங்கேண்மைமற்
றன்னவன்யாரெனி னறைகுதுங்கேண்மோ
புலிக்கொடிகயற்கொடி பொருவிற்கொடியுடை
வேந்தர்தநாட்டுறை வேளாண்மாக்கள்
சோழியரென்றும் பாண்டியரென்றுங்
கொங்கரென்றும்பெயர் பெற்றனரவருள்
வளரெறும்பீசர் மலைக்குமேற்குக்
கடும்புனல்பாய்மதிற் கரைக்குக்கிழக்கு
நலந்தருகாவிரி நதிக்குத்தெற்கு
வளம்பொலி[illegible]பிரான் மலைக்குவடக்கு
நவிலுமிவ்வெல்லை நான்கனுட்பட்ட
விடங்குடிகொண்ட வியல்வேளாளர்
முன்னமுரைத்த முத்தமிழ்வேந்தரு
மெங்கண்மூவருக்கு மியன்முடிசூட்டுதற்
குங்கலையமைத்தன மூவந்துகொள்வீரெனக்
கொண்டுமகிழ்ந்தனையார் கோத்தன்மையரே
யாயினரதனு லவர்வாழ்நாடு
கோனாடென்றோர் குலவுபெயர்பெற்ற
துரைக்கருங்குன்ற மொருபதினெட்டு
நத்தமெழுநூற் றறுபத்தாறு
முன்னும்படிநன் குளகுளக்காடு
முன்னுமாயிரத்து முந்நூற்றுமுப்பதிற்



தேவாலயங்கள் சிறக்குநூற்றெட்டு
மிரும்பிரமாலய மிருபத்தெட்டுங்
குறையறக்கொண்டவக் கோனாடுபின்ன
ரறைதருபுனல்வெள் ளாற்றின்றென்பா
லுரைதென்கோனா டொலியூர்க்கூற்றந்
திரைகரையெறியுமத் திருநதிவடபா
லொளிர்வடகோனா டுறையூர்க்கூற்ற
மெனப்பெயர்பெற்றுநன் றியங்குங்காலம்
வண்மையவ்வேளாண் மாக்கண்மிகப்பெருகி
வடகோனாட்டில் வண்குளத்தூரிற்
பெரிதிருத்தலின்மிகப் பெரியகோனாடென்
றொருபெயர்பெற்றவவ் வொண்குளத்தூரிற்
கொங்குராயர் கோத்திரமதனில்
வந்தவதரித்த செந்தமிழ்க்குரிசி
லிரும்புவியேத்து மிளையான்குடியி
லருமுளைவாரி யன்னம்படைத்த
குருமணிமாறனங் குலமெனுங்கொண்ட
லவிர்விரையாச்சிலை யாண்டார் திருமலை
யுடையான்கருவரா லுகளரியாற்றுன்
குளிர்புனல்வயலெறுறுங் குலவுகோனாட்
டமரரும்புகழ்வே ளாண்குளத்தூரா
னுச்சைச்சிரவ முறமும்பரியா
னயிராவதநிக ராயதிண்களிற்றுன்
குளிர்மதுப்பொழியுங் குவளைமாலிகையா
னுலகமூன்று முணர்கொடைமுரசான்
வெற்றிக்கொடியெனு மேழிக்கொடியா
னடங்கலர்நடுங்க வடர்க்குமாணையா
னளவில்பன்னூலு மறிறபவுணர்ந்தோன்
பண்பெலாமோருருப் படைத்தெனப்பொலிவோ

னூருணிநீர்நிறைந் தற்றேயுலகவாம்
பேரறிவாளன் றிருவெனப்பெரியோ
ருரைத்தவாக்கியத்திற் கொருசான்றாகப்
பயன்படுசெல்வம் படைத்துமகிழ்பூமா
னடைந்தோர்வெங்கலி யடர்க்குந்திறலோன்
பிறர்மனைநோக்காப் பேரறிவாளன்
கற்றோர்நட்புக் கழலாக்கனவா
னானிலமுவப்ப நடாத்துநீதியா
னரும்பொருள் செறியுமைந்திணைக்கோவை
நம்பாற்கேட்ட நகுபுகழ்ப்பெரியோன்
வலந்தரு நதிக்குலவள்ள
னலந்தருவேத நாயகமாலே. (௧)

---

## விருத்தம்.

தெரியவிரு வேறுலகத்தி யற்கைதிருவேறு தெள்ளியராதலும் வேறென் றுள்ளபடியுரைத்த, வரியபுகழ் வள்ளுவர்தம் வார்த்தையினைமறுத்தா னரசர் காரியநடவு மதிகாரத்தொடுநா, லுரியவென வுணர்ந்து பெருஞ்செல்வமுங் கல்வியுமிக் கொருங்கடைந்து பொருட் கொடையி லொப்பிலானாகி, விரியவனி மகிழவொரு நீதிநூலியற்றி விளக்கியசீர்வேத நாயகக் குரிசினானே. (௨)

வள்ளுவராதியரேநன்னீதிநூலுரைப்பதற்குவல்லாரென்று, துள்ளுவர் யாவருமனைய துண்மையாயினுங் குளத்தூர்ச்சுகுணவள்ள,லுள்ளுவர் பாலருணிறுவும் வேதநாயக மகிப னுரைத்தநீதி, தள்ளுவர்யா ராதலிற்றேற் றேகாரந்தவிர்த்திசைத்த றகுதியாமே. (௩)



ஓதிநூ லுணர்ந்தகுளத் தூர்வேதநாயகமா லுவப்பிற்செய்த, நீதிநூறேவியலா சிரியனியலுணர்த்துதலா னிகரின்ஞானச், சோதிநூ லெனச்சொலலாமிந்நூன்முனெந்நூலுஞ்சொல்லிற் கானூல், பாதிநூன் முக்கானூ லுலட்டுநூல் சிலம்பிநூல் பருத்திநூலே. (௪)

வில்லாரு மதிற்குளத்தூர் வேதநாயகமகிபன் விருப்பிற்செய்த, நல்லாருண் மகிழ்நீதி நூலினுளகற் பனையு நயமு மோரி, னெல்லாருங் கற்றவரே யெல்லாரும் பாடுநரே யெல்லாருந் தாஞ், சொல்லாருமறிவினரே யறிவினர்தந் துதியவருஞ் சூடுவாரே. (௫)

முன்னோர்களுரைத்த பெருநீதிநூற் பொருடெரிய முயவினம்மா,பின்னோர்களுரைத்தவுரை பலவவையோரினுமையம் பிறந்தொன்றற்கொன், றன்னோர்சொன்மாறுபடும்பொருள்விளங்க வுருபுமுதலவிழ்த்துப்பாடு, மன்னோர்நம் வேதநாயகமுகினூல்போலுளதோ மதிக்குங்காலே. (௬)

பொருளுடையோ னீயேயோ வடதிசைக்கோ மகனுமுளன்புவனங்காக்கு, மருளுடையோ னீயேயோ நெடுமாலுமுள னீதி யமைநூல்சொல்லுந், தெருளுடையோ னீயேயோ வள்ளுவனுமுளன்குளத்தூர்ச் செல்வாநானு, மிருளுடைய வெழுகதிர்நேர் வேதநாயகமகிபாவியம்புவாயே, (௭)

தாவினூற்பொருட்கேள்வி யுறலதிக மதற்கதிகந்தானே கற்றல், மேவியதை வெளிப்படுத்த லதற்கதிகமதற்கதிகம் வியன்பாச்செய்தல், பாவினுங்கற்பனை யமைத்தலதற்கதிக நீதிநூல்பாடலுளும், பூவினிடைய திகமெனில் வேதநாயகமகிபன் புகழெற்றுமே. (௮)

சேல்பாயும் புனற்குளத்தூர் வேதநாயமகிபன் செய்தநீதி நூல்பாயும றிஞரேநண்ணியராய்ச் சிறந்துவரு நோன்மையாலே, வேல்பாயுங் களிற்றரசர் மேன்மேலும் விருப்பமுறவினவு

கியின்பச், சால்பாயுங் கடவுளடிக்கீழுறைவரென்னாளுந் தவாது தானே. (௯)

நூலியற்றி யீதலொன்றே யுள்ளதெனக்கொள்ளலே பன்னூலுமோர்நம், மாலியற்றிக்கொடுத்திடுமைந்திணைக்கோவை யேற்றனையாலளவிலாத, சேவியற்றுப்புளூற்குளத்தூர் வேதநாயகமகிபாசிறப்பச்செய்யுட், பாலியற்ற லேற்றலிவையிரண்டினு நீயெப்போதும் பயில்வாயே, (௰)

ஆயபுவியாளுமாங்கிலேயமன்னராண்டோ ராயிரத்தெண்ணூற்றைம்பத்தொன்பதனுக்கொத்த, தூயபுகழ்க்காளயுத்தியாண்டுறுதைத்திங்கடொரு தஞ்சைச்சுபாசீகாழித்தாலூகாவின், மேயமுன்சீபதிகாரஞ்செலுத்திடுநன்னுளின்விளங்குகுளத்தூர்ச் சவரிமுத்துமகிபால, னேயவரோதயன் வேதநாயகப்பேர்க்குரிசி னீதிநூலியற்றி யரங்கேற்றினனன்குறவே. (௰௧)

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

# நீதி நூல்.

காப்பு.

ஆதிநூலொன்று மரும்பயன் யாருந் தெளிவா
னீதி நூலொன்று நிகழ்த்தவே—மாதிரமோ
டித்தரை யனைத்துமியற்றியினி திற்றிதிசெய்
கத்தன்மல ரொத்த கழல் காப்பு. (௧)

வேறு.

மாதிரந்தனில் வாழ்பவர் யாவருந்
தீதிகந்தறச் செய்கை முயலுவா
னீதிநூலை நிகழ்த்த நிகரிலா
வாதிதேவ னடியிணை யேத்துவாம். (௨)

அவையடக்கம்.

வெயிலினைச் சோதிசெய்வான் விளக்கிடல்போலுங் காகங்
குயிலினுக் கிசையுணர்த்துங் கொள்கையேபோலு நட்ட
மயிலினுக் குணர்த்துங்கான வாரணமெனவும் யாவும்
பயிலுலகிற்கு நீதி பகரயான் றுணிவுற்றேனல். (௩)

பானுவின் கதிரையுண்ட பளிங்கொளி செய்தல்போலும்
வானுலாங் கொண்டல்பெய்யு மழையினைத் தழையிற்றுங்கித்
தானும்பெய் தருவைப்போலுந் தமிழொரு மூன்றுமாராய்ந்
* தானுவார்கவிசொல்வோர்முன்னறிவிலேன்பாடலுற்றேன்.

முடவரே யாட + வந்தர் முன்னின்று பார்த்துவக்கத்
திட்மொடு † மூகர்பாடச் செவிடர்கேட் டதிசயிக்கக்

---

* ஆனுதல்-நிலைபெறுதல். + அந்தர்-குருட்டர். † மூகர்-ஊமையர்.

கட்டுலகினிற் கண்டெனக் கனவினுங் கலையைத்தேரா
மடமையேனுலகநீதி வகுத்திடத் துணிந்தேன் மன்னோ. (௩)

பயன்கொள்வோ ரதனைநல்கும் பசுவுருவிலதென் றோரார்
வியன்சினைவளைவுநோக்கார்விளைந்ததீங்கனிபறிப்போர் [நூலி
கயங்கொள்சே றகற்றித்தெண்ணீர் கைக்கொள்வா ரென்ன
னயன்கொள்வ தன்றிப்பாவினவையைநோக்கார்மேலோரே.

வேலைவாயுண்ட நீரை மேகஞ்சிந்தினுமே சிந்துங்
காலிடைக்கொண்ட நீரைக் கழனியக் காற்குநல்கும்
பாலர்கற்றவை யாசான்பாற் பகர்வர்யா னூலுணர்ந்த
சிலர்பாற் கற்றதன்னோர் செவியுற நவின்றேனம்மா (௫)

கோவிலைப் பழிக்கினோரெண் குணனையும் பழித்ததொப்பாங்
காவினைப் பழிக்கினுண்டார் கடிமலர்ப் பழித்ததொப்பாம்
வாவியைப் பழிக்கிற்கொண்ட வண்புனற் பழித்ததாமென்
பாவினைப் பழிக்கினீதிப் பயனையும் பழித்ததாமே (௬)

உ

கடவுள்துணை.

# நீதிநூல்.

## முதல் - அதிகாரம்.

## தெய்வமுண்டெனல்.

மண்டப மாதிகண்டோர் மயனுள னென்னல் போலுங் [லு
குண்டல முதல்கண்டோர் பொற்கொல்லனுண் டென்னல்போ
மொண்டுகில் கண்டோர்நெய்தோ னொருவனுண் டென்னல்
போலு, மண்டமற் றகண்டஞ்செய்தோ னுளனென வறிவாய்
நெஞ்சே. (௧)

தீட்டுவோ னின்றியாமோ சித்திரந்திகழ் பொற்பாவை
யாட்டுவோ னின்றித்தானே யாடுமோ திவவியாழின்



மீட்டுவோ னின்றிக்கீதம் விளையுமோ சராசரங்க
ளூட்டுவோ னொருவனின்றி நன்கமைந்தொழுகுங்கொல்லோ.

மரமுத லசைதலாற்கா லுளதென மதிப்பாரெங்கும்
பரவிய புகையாற்செந்தீ யுளதெனப் பகர்வார்சுற்றும்
விரவிய மணத்தாற்பாங்கர் வீயுளதென்று தேர்வார்
பரனுளனெனு முண்மைக்குப் பாரெலாஞ் சான்றுமன்னோ. ()

நாதனில்லாத வீடு நாடுமே நடவாதென்னில்
வேதநாயக னிலானேல் விதுகதிர் மீனுதித்தல்
சீதநீர் பெயறருக்கள் சீவராசிகள் கதித்தல்
பூதபௌதீக மெல்லாம் புரையற வொழுகற்பாற்றே. (௪)

பூதம் யாவுக்குமேனாய்ப் பொருந்திய விசும்பைக்காற்றை
வேதனூலதனை மண்ணோர் மெய்யுறையுயிரை நெஞ்சை
யேதமிலறத்தைக் கண்ணாற் பார்த்திலோமெனினுமுண்டென்
றோதல்போற் றெய்வந்தானொன் றுளதெனறேற்ற மம்மா. ()

வாச மூக்கறியுமன்றி வாய்செவி விழிமெய்தேரா
பேசவா யறியுமன்றிப் பின்னையோர் புலன்றேராது
நேசமார் தொண்டர்ஞான நேத்திரங்கொண்டு காணு
மீசனை முகத்தின்கண்ணா லகத்தில்யார் காணவல்லார். (௬)

வானின்றி மழையுமில்லை வயலின்றி விளைவுமில்லை
யானின்றிக் கன்றுமில்லை யரியின்றி யொளியுமில்லை
கோனின்றிக் காவலில்லை குமரர்தா யின்றியில்லை
மேனின்ற கடவுளின்றி மேதினியில்லை மாதோ. (௭)

கதிரவற் கொளியின்றென்னக் கண்ணிலார் கழறல்போலும்
* வதிரர் பேராழியோசை மாறிய தென்னல்போலு
மெதிருறு பொருளைக்காணா திடருறு பித்தர்போலு
மதியிலார் தேவின்றென்ன மருளொடு மியம்புவாரே (௮)

* வதிரர் - செவிடர்.

அத்தன்றாய் முன்னோர்தம்மை யறிகிலா னிலரென்பானோ
சத்தமின் சுவைகந்தத்தைத் தரிசியா னிலவென்பானோ
நித்தனைக் கண்ணிற்காணா நீர்மையா லிலனென்றோதும்
பித்தரிற் பித்தர்பாரிற் பேசிடவுளரோ வம்மா. (௯)

தேவனே யிலனேன்மோக்கந் தீநரகில்லை வேதம்
பாவ புண்ணியங்களில்லைப் பரனிலை யென்போனில்லின்
மேவலர் தீயிட்டன்னான் * விபவமெல்லாஞ் சிதைத்துச்
சீவனை வதைசெய்தாலென் செய்குவன் சிதடன்றானே. (௰)

• முதல்—அதிகாரம் - தெய்வமுண்டெனல்;
முற்றுப்பெற்றது.

---

உ-ம். அதிகாரம்.

## தெய்வத் தன்மையும் வாழ்த்தும்.

ஆதியீறில்லதன்றன்னை யமைத்த காரணமொன் றில்லான்
கோதிலான் கணத்துளண்டங் கோடிசெய் தழிக்கவல்லா
னோதிடு மொப்பொன்றில்லா னுருவிலா னிருவிண்டங்குஞ்
சோதிதன் னிழலாக்கொண்ட சோதியைத்துதியாய்நெஞ்சே.

ஆணலன் பெண்ணுமல்ல னஃறிணை யலன்பாரல்லன்
சேணலன் புனல்காலல்லன் றீயல னைம்புலத்தாற்
காணரும் வடிவனித்தன் கத்தனம்மத்தன் சுத்தன்
மாணுற முருக்கொண்டன்ன மாட்சியான் கடவுணெஞ்சே. ()

தரையெலா முளன்றுரும்பு தன்னினுமுள்ளனண் டாண்ட
நிரையெலா முளன்மெய்யாவி நெஞ்சுளு முளனியம்பு [தான்
முறையெலா முளன்றான்மேவி யுறைபொருள் கெடக்கெடா
புரைதபு தன்னைத்தானே பொருவுவோ னொருவனன்றே. (௩)

* விபவம் - செல்வம்.



உடுக்கணம் யாவும்வேவ்வே றுதயனா மொவ்வொன்றிற்கு
நடுக்கட் பூவலயஞ்சோம * நபமொடும் வரம்பில்கோடி
யடுக்கடுக்காச் செய்தெல்லா மந்தரத் தமைந்துநிற்க
விடுக்கனொன்றின் றிக்காக்கு மெம்பிரான் பெரியனன்றோ. ()

பண்ணிய புவனமெல்லாம் படர்கையிற் பரிக்குமேக
னண்ணிய கரஞ்சற்றோயி னழீஇயொன்றோடொன்றுமோதித்
திண்ணிய வகிலகோடி சிதைந்துகு மெனவதிர்ந்தும்
புண்ணிய மனுவாற்றேவைப் போற்றிடாவாறென் னெஞ்சே

இதயந்தன் வேகத்தோடு மெண்ணிலவ் வியத்தகாலங்
கதமொடு மீச்சென்றாலுங் கடவுண்மெய்ந் நடுவையன்றி [ம்
யிதர வங்கத்தைக்காணா தெனின்முடி யெவண்பொன்னொக்கு
பதமெவ ணகண்டாகாரப் பராபரற் குரையீர்பாரீர். (௬)

விலகரு மருளின்மீக்கூர் விமலனைவாழ்த்த் வேண்டி
னலகில் கற்பங்களேநம் மாயுளாய் மும்மைத்தாய
வுலகமோ ருடம்பாயந்த வுடம்பெலாம் வாயாய்நித்தம்
பலகவி மாலைசூட்டிப் பரவினுமுடியுங் கொல்லோ. (௭)

உருவில் சூனியமாயாது முணர்விலா திருந்தநம்மைத்
திருவுட லோடுஞானச் சீவனாகப் படைத்துச்
சருவ நன்மையுமேதந்து தன்னையுந் தந்தநாதன்
மருமல ரடிக்குநம்மை வழங்குதல் பெரிதோநெஞ்சே. (௮)

பூமிநம் மில்லாமற்றைப் பூதங்கள்பணிசெய் வோராஞ்
சோமன்மீன் கதிர்விளக்காஞ் சூழ்மரம் பயிராகாரச்
சேமவைப்பா நமக்கித் திரவியமியாவு நல்குஞ்
சாமியை யுவமித்தேத்தச் + சாமியமியாது நெஞ்சே. (௯)

தோன்றக விடமதென்னுந் துன்பசாகரத்தி லத்தன்
றேன்றரு மலர்த்தாட்டெப்பஞ் சேர்கிலாதகன்று நிற்போர்,

* நபம் - ஆகாயம். + சாமியம் - உவமானம்.

வான்றனைப் பிரிந்தபுள்ளும் வாழுநீர் நீத்தமீனுங்
கான்றனை யகல்விலங்குங் காவறீர் நகருமொப்பார். (௰)

பாரெலாம் பகைசெய்தாலும் பராபரன் கருணையுண்டேற்
சாருமோர் துயருமுண்டோ தாயினுமினிய வையன்
சீரருளின்றே லெண்ணி றேர்கரி பரிபதாதிப்
பேரணி யுடையேமேனும் பிழைக்குமா றெவன்கொனெஞ்சே.

இருநிதி பெற்றதீன ரெண்ணிடாதிகழ்ந்த தொப்ப
வருவமா யுருவமாய்நம் மாருயிர்க்குயிரா யண்டம்
பெருநில மெங்குமின்பப் பெருக்கெடுத் தோங்கிநிற்குங்
கருணையங் கடலாடாது கழித்தனை வாழ்நாணெஞ்சே. (௰௨)

முன்னவன் றனையுளத்து முன்னமுன்னத்தெ விட்டாக்
கன்னலோ வமுதோபாகோ கற்கண்டோ வெனத்தித்திக்கு
மின்னன் மேவாதவன்று னெங்கணு நிறைந்திருந்து
மன்னனை நீத்தசேய்போ லையனைநீத்தாய் நெஞ்சே. (௰௩)

ஆயுணாள் சிலவெங்காம மனந்தர்நோய் சோம்புகொண்ட
காயமே வளர்க்கவெண்ணில் கரும்ங்கள் செயலிவ்வாறே
தேயுநாள் கழியநிற்குஞ் சேடநா ளற்பமாகுந்
தூயநாதனைத் தொழாமற் றொலைக்கின்றயதையு நெஞ்சே. ()

பொங்கலை யாழிதாண்டிப் பொருப்புகள் கடந்தோயாம
லங்குமிங்குந் திரிந்தே யழிந்துபோ முடலைக்காப்பா [ப்
யெங்கணு முள்ளோன்றனுன் னிருக்கையி னிருந்துபோற்றி
பங்கமில் சுகம்பெற் றுய்யப் பாரமென்பகராய் நெஞ்சே.(௰௫)

மாசறு கடவுள்பாத மலரினைத்தினமும் போற்றிப்
பாசமில் சுகம்பெறுமற் பவஞ்சத்து ழலல்பைம்பொ
ஞசனந் தன்னிலேறி யரசுசெய் தகைமைநீத்துக்
காசனக் கழுவிலேறுங் கயமையே கடுக்குமாதோ. (௰௬

போதநாயகனை யுன்னப் புந்தியே வெந்தீயொப்பாந்
தாதல ரடிவணங்காத் தலைகுலைசிலையாஞ் சீர்சான்



மாதலத்தவனை வாழ்த்தா வாயது தூயதன்று
காதலன் பொடுநீர்தூவாக் கண்களே புண்களாமால். (௰௮)

கதிரவன் கிரணக்கையாற் கடவுளைத் தொழுவர்ன்புட்கள்
சுதியொடு மாடிப்பாடித் துதிசெயுந் தருக்களெல்லாம்
பொதியலர் தூவிப்போற்றும் பூதந்தந் தொழில்செய்தேத்து
முதிர்கட லொலியால்வாழ்த்து மகமேநீவாழ்த்தா தென்னே.

அறிவிலா ரரசரென்றற் கமைச்சரே சான்றுமன்னோர்
செறிபெருந் தானையான்மெய்த் திறலிலா ரெனவறிந்தோம்
வறியரென் றிறையிரக்கும் வாய்மையா லறிந்தோமென்று
நெறிவழா துலகந்தாங்கு நிருபனைத்துதியாய் நெஞ்சே. (௰௯)

இரவினு மற்றோர்பாரா விடையினும் பாவஞ்செய்வாய்
கரதலா மலகம்போன் முக்காலமு முணர்வோனெங்குந்
தரமொடு வீற்றிருக்குந் தன்மையெள் ளளவுமோராய்
பரனிலா விடமொன்றுண்டேற் பவமவண்செய்நீ நெஞ்சே. ()

உ-ம். அதிகாரந் தெய்வத்தன்மையும் வாழ்த்து
முற்றுப் பெற்றது, ஆக அதிகாரம்
உ-க்குத் திருவிருத்தம், ௨௰.

௩-ம். அதிகாரம்.

## அரசியல்பு.

எந்தவேளையினு நொந்தவர் துயர்கேட் டிடரிழைப்பவன்
றனதேக, மைந்தனே யெனினும் வதைத்திட வொல்கான்
மாக்களின் சுகநலமன்றிச், சிந்தனைமற்றோர் பொருளினிற்
செலுத்தான்; தீமொழி கனவினும்புகலான், றந்தைபோற்றாய்
போ லெவரையுமோம்புந் தன்மையனே யிறையன்றே. (௧)

மன்னுயிரனைத்துந் தன்னுயிரென்ன மகிழ்வொடு தாங்கியா
ரேனு; மின்னலுற் றயர்ந்தோ மெனக்கலுழ்ந்திடிற்றன் னிரு
விழி நீரினையுகுப்பா, னன்னவெந்துயரை நீக்குமன்றுனென்

றயின்றிடான் றுயின்றிடானெவரு, நன்னகரெங்கு முளனெனப்பகர நாடொறுமியங்குவோன் கோனே. (௩)

தாயறியாத சேயிருந்தாலுந் தானறியாதவ ரில்லை, யாயதன்மையி னுலறவழிநிற்கு மறிஞரை யறிந்தவர்க்குரிய, தேயவாதிக்கந் தந்துநன்னீதி செலுத்தியெங்கணு மருந்தினுக்குந், தீயவரிலரென் றிசையுறவடக்குந் திறலுளோன் பூதலவேந்தே.

தன்புகழ்கருதி மருவலரோடுஞ் சமர்புரிந் துயிர்களை மாய்த்துத், துன்பமேசெய்ய வியைந்திடான் முற்போர் தொடுத்திடான் றன்னுயிரனைய,மன்பதைக்கிடுக்கண் யாவரேசெயினும் வாளம ரியற்றி நீக்கிடுவா, னின்பதுன்பங்க டனக்குமற்றவர்க்கு மேகமென் றெண்ணுவோன் வேந்தே. (௪)

தானினியற்று மனுநெறிப்படிமுன் முனடர்ந்தறவழி காட்டி, ஞானநற்குணத்தின் மேன்மையாலெவர்க்கு நாயகன்றுனெனத் தெரித்துத், தானமுந்தயையு மெய்மையுந் தவமுந் தற்பரன் வணக்கமும் பொறையு, மானமுமிகுத்து நரரெலாஞ்செழிக்க மகியரசளிப்பவன் மன்னே. (௫)

சத்திரஞ்சோலை சாலைகள்குளங்க டண்ணதிமதகொ டாலயங்கள், வித்தியாசாலை மாடகூடங்கள் வேறுவேறமைத்து வேளாண்மை, சத்தியமக்லா வாணிகமாதி சகலநற்றொழிலவரவர்க, ணித்தியமுயல ,வித்திசைபுரக்கு நிருபனேநிருபனுமன்றே. (௬)

காதிறைவனுக்குக் கண்ணெனலான்மெய் காண்குறுனெனுமொழிமாற்றி, வாதிகள்சாட்சி சாதகமெல்லாம் வகைவகையினிது கேட்டமைந்த, மேதினிக்கிழமை நீங்கிடுந்தன்மைவிளையினு நடுவினீங்காது, பாதியாவணுவும் பகுந்துதீர்ப்பதுவே பார்த்திபன் கடமையாமன்றே, (௭)

மன்னவன் வலிசெங்கோலி னுலன்றிவாளினுற் சேனையாலில்லை,நன்னெறிவழுவா மன்னவன்றனக்கு நாடெலாம் பேர



ரணுலகின், மன்னுயிரெல்லா மவன்படையன்றோ மனமெலா மவனுறைபீட, மின்னதன்மையனு யரசளிப்பவனை யிகல்செயுந் தெறுநருமுளரோ. (௮)

கைப்புரையேற்றுப் பொய்ப்புகழேலாக் காதின னருள்பொழி கண்ணன், றப்புரைவழங்கா நாவினன்புவியோர் தாசன்றுனெனவுணர் மனத்தன், செப்பயன்மடவார் காணருமுரத்தன் றிருந்தலர் காணரும்புறத்த, னெப்பொழுதினுஞ்சென் றியாருங்காண்முகத்த னீசனன்புடையவ னிறையே. (௯)

கொடுங்கோலரசன்.

கொடியமன்னவர்க்குக் குடிகளேயொன்னர் கோட்டையே யமர்க்களம்வர்த, மடிகடோய்நில மெங்கணும்படுகுழியாமயின்றிடு மன்னமும்விடமா, நெடியவாசனமே காசனமேடை நிமிருழையோர் நமன்றூதர், கடிமனைமயானக் காடெனிற் கொடுங்கோற் காரணுய்யுமாறுள்தோ. (௰)

௩-ம். அதிகாரம் அரசரியல்பு முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் ௩-க்குத் திருவிருத்தம். (௪௰)

---

௪-ம் அதிகாரம்.

## குடிக ளியல்பு.

வேந்தனேயில்லா விடினுலகத்து மேலதுகீழதா மணஞ்செய், காந்தனுக்கடங்கிக் களத்திரநடவாள் காதலர்தந்தைசொற்கேளார், மாந்தர்வேளாண்மை முதற்றமக்குரிய வளமைகூர் தொழில்களின் முயலார், சாந்தருந்தீய ராவரேற்றீயர் தன்மையைச் சாற்றுமாறெவனே. (௧)

நம்மனைமைந்தர் கிரகவாழ்வெல்லா நரபதியாலவ னிலனேல், லம்மனைதீயர் கைவசமாவ ளருநிதிகொள்ளையா நாளும், வெம்மையோடொருவ ரொருவரையுண்பார் மேலவரசடரான்

மெலிவா, ரம்மவீதெல்லா முணர்ந்தரசாணைக் கமைதனற் கு
டிகளினியல்பே. (௨)

வேறு.

நதியினு முயர்பணை நந்துங் காருலாங்
கதியினு முயர்வரைத் தருக்கள் காயுமால்
பதியினு முயர்ந்தடங் காப்பைஞ் ஞீலங்கள்
விதிசெயல் சிதைந்தக மெலிந்து நையுமே. (௩)

தரையெனு முடற்கொரு தலைவ னேதலை
நரர்பல வுறுப்புக ணலங்கொண் மெய்யது
சிரமுறும் பொறிவழிச் செல்லுந் தன்மைபோ
லரவர சனுக்கமைந் தொழுகும் வையமே. (௪)

பானு வெப்புடையவ னெனினும் பானுவே
வானுல வானெனில் வைய முய்யுமோ
கோனருங் கொடியனே யெனினுங் கோனின்றி
மானவ ருய்யவோர் வழியு மில்லையே. (௫)

படியின்மன் னுயிர்க்கெலாம் பாதுசெய் கின்ற
நெடியமா சேனையை நெறிசெய் மாந்தரைக்
கடியொடுந் தாங்கவூர்க் காரியஞ் செயக்
குடியிறை யிறையவன் கொள்ளுங் கொள்கையே. (௬)

வேறு.

கோவரிய சீவன் குடிக ளுடலாவார்
சீவன்சும்மா விருக்கத் தேகமுழைத் தோம்புதல்போற்
பூவலய மீதினிற்றம் * பூட்சிகளி னுழைத்துக்
காவலனைக் காக்கக் கடனுங் குடிகளுக்கே. (௭)

௪-ம், அதிகாரம் குடிகளியல்பு முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம் ௪-க்குத் திருவிருத்தம்,(௪௭)

---

* பூட்சி - சரீரம்.



௫-ம், அதிகாரம்.

## ஞானசாரியன்பெருமை.

அகவிரு ளகலஞான விளக்கினையருளி னேற்றிச்
சுகலமு நல்குங்கேள்வித் தனத்தினை நல்கியாதிப் [சு
பகவன்றன் சொரூபங்காட்டிப் பவமறமிரண்டுங் காட்டி
சுகநிலை காட்டுந்தியாகத் தோன்றலைமறவ னெஞ்சே.(க)

வேறு.

கான லெனப்படு காய மிதப்பன்
ருனவ மேபுவி தங்க வளித்தா
னீன மிலாரிய னென்று மொருங்கா
ஞான வுடம்பினை நல்கின னன்றே. (௨)

வேறு.

நாட்டமின்றி யொளி யெப்பயனை நல்குமனையிற்
பூட்டு பொன்றிறவு கோலினை யலாதுபுகுமோ
வேட்டகத்தரிய நூல்களுளவேனு மினிதாக்
காட்டருட்குரவ னின்றியெவர் காண்பர் பயனே. (௩)

ஞானசூரிய னெனுங்குரவ னின்றி நரர்த
மீனவெம்பவ விராவை யகலா ரெவருமே
கானம்வாழ் மிருகமா வர்கதிவாயில் பொதியு
மானவர்க் குறையுளாய் நிரயம்வரீய் விரியுமே. (௪)

மண்ணிறைக் கடியராயுயிர் வளர்ப்பர் பலரும்
விண்ணிறைக் கடியரா யெவரும் வீடுபெறவே
புண்ணியத் திருமறைப் பொருளை யோதுபுனித
ரெண்ணிடற்கரிய பெற்றியை யியம்ப லெளிதே. (௫)

ஐம்புலக்கத வடைத்துமன மாவை யறிவாங்
கம்பம்வீக் கியஞருஞ் சுகமெனக் கருதியே

செம்பொனைத் திரணமாமதி திறத்த குதியோர்
தம்பெரும்புக ழியம்புதற்குந் தரமதோ. (௬)

வேறு.

தலைகீழுறச் செய்யினுந் தீபம்விண்டன்னை நோக்கும்
கலைதேயினுந் தண்கதிர்வீசுமக் கங்குற் றிங்கள்
விலைமாமணி யைப்பொடி செய்யினு மின்னருந்து
நிலைநீங்குவ ரோதுயர் மேவினு நீர்மையோரே. (௭)

கைத்திட்ட மருந்திலக் காரங்கலந்து கூட்டி
மத்தித்தருள் பண்டிதர்போன் மறநோய் தவிர்ப்பா
னெத்திக் கினுங்கேட்பவர் காதுளமின்ப மேவித்
தித்தித்திட வாரியர் நன்மறை செப்புவாரே. (அ)

சிறுவாய்க் கலத்துட் ளொியாகச் செலுத்துநீர்போ
லறியாச் சிறுவர்க்கு முணர்ந்தறி யாதவர்க்கும்
வறியார்க்கும் விளங்கிடவே தெளிவா வகுத்து
நெறியைத் தெரிவிப்பர் நன்னூனெறி நின்றமேலோர்.

வைவார்தமை வாழ்த்தியு நெஞ்சில் வருத்தமுற்று
நைவார்ருட னேந்தழுதுந்தமை நண்ணித் துன்பஞ்
செய்வாருறு பீழைநினைந்துதஞ் சிந்தை நொந்து
மெய்மாமறை யின்பயனோதுவர் மேன்மை யோரே. (௯)

வேறு.

பரிதியின் கிரணமங் கணமதிற் படியினு
மரிதின் மாசணுகுறு தகலல்போ லினியநற்
சரிதமில் லவர்குழாஞ் சார்ந்து போதிக்கினுந்
துரிதவெம் பவமுறுர் தொன்மறைக் கிழவரே. (௰)

௫-ம். அதிகாரம் ஞானசாரியன்பெருமை முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் ௫-க்குத் திருவிருத்தம், (௫அ)



௬-ம். அதிகாரம்.

## பொய்க்குருவின்றன்மை.

திருடன்பொருட் காவலனுதலுஞ் செல்வழிக்குக்
குருடன் குருடன்றனையே துணைகொள்ளல்போலு
மிருடங்குளமாந்தரை வான்கதியேற்ற வென்னு
வருடங்கிய நெஞ்சமிலான்குரு வாயவாறே. (௧)

பெருவெம்பிணி யாளன்மற் றோர்பிணி பேரும்வண்ணந்
திருமந்திரஞ் சொல்வனென் றோதிடிற் றிண்மையாமோ
தருமந்தனை நாட்டவந்தோன் குறை தானுளானே
லிருமண்டல மீதவன்சொல்லெவ ரேற்பர் மாதோ. (௨)

பாவச் சலதிக்குளுருவகை பாருளோர்க்குக்
காவற்றுணை யாங்குரவன் குணங் கல்வியின்றி
யாவற்றனை பூண்டவனே யெனிலாருங் கொள்ளா
ரேவத்தெரி யான் * திமின்மீ தெவரேறு வாரே. (௩)

பழிதீர்கலை யாவுமுணர்ந்தும் பலர்க் குரைத்து
மிழிவேயுறத் தாமடங்கா மதி யீனரார்க்கும்
வழிகாட்டிட நாட்டுமரத்தையும் வையமேச
விழியற்றவன் கையினில்வைத்த விளக்கு நேர்வார். (௪)

சொன்னத் திருடன்சிறு கள்வனைத் தூறியேச
லென்னப்பொரு ளாசையுளான் பிறரிச்சை தீர்ந்து
மன்னத்திரு ஞானமுரைத்தன் மற்றோர் துறக்கும்
பொன்னைக் கவரச்செயும் வஞ்சனைபோலு மாதோ. (௫)

வேறு.

வாயிற் றேனுந்தன் வாலிற் கொடுக்குஞ்சே
ரீயின் வாயினி லிங்கிதச் சொல்லொடுந்
தீயசெய்கை யுளானைத் தினஞ் சிறு
சேயு மெள்ளுந்தன் சிந்தையு மெள்ளுமே. (௬)

* திமில் - மரக்கலம்.

இகத்தின் வாழ்வினி லிச்சைய ருன்றனைச்
சகத்தினிற் குரு சாமியென் ருேதுதல்
சுகத்தை நீங்கித் துயரஞ் செறிநர
ரகத்தை வீடென் றறைதல் சிவனுமே. (௭)

ஆதிதேவ னறிவில் லவர் செயுங்
கோதி னைக்கமை கொண்டு பொறுக்கினு
நீதிநூலை யுணர்ந்து நெறி தவிர்
வேதி யர்க்கு விமோசன மில்லையே (௮)

ஒருமை யாய்த்தன் னுதர நிமித்தமே
தரும வேடந் தரிக்குதல் வெம்புலி
* புருவை தன்னைப் புசிக்கப் புருவையின்
சருமம் பூண்டங்கு சார்த னிகர்க்குமே. (௯)

௬-ம். அதிகாரம், பொய்க்குருவின்றன்மை முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம் ௬-க்குத் திருவிருத்தம். (௬௭)

---

௭ - ம். அதிகாரம்.

## பிதாமாதாவைவணங்கல்.

சின்னவோர் பொருடந்தோரைச் சீவனுள்ளளவு முள்ளத்
துன்னவே வேண்டுமென்ன வுரைத்தனர் பெரியோர்தேகந்
தன்னையா ருயிரைச்சீரார் தரணியின் வாழ்வைத்தந்த
வன்னை தந்தைக்குச்செய்யு மருங்கைம்மா றுளதோவம்மா. ()

கடவுளை வருந்திச்சூலாய்க் கைப்புறை யுண்டனந்த
மிடர்களுற் றுதரந்தன்னி லீரைந்து திங்கடாங்கிப்
புட்வியி லீன்றுபன்னுள் பொற்றனப் பாலையூட்டித்
திடமுற வளர்த்துவிட்ட செல்வியை வணங்காய் நெஞ்சே. ()

எப்புவி களும்புரக்கு மீசனைத்துதிக்க வேண்டி
னப்பனே தாயேயென்போ மவ்வரையே துதிக்கவேண்டி

---

* புருவை - ஆடு.



னெப்பனை யுளதோவேலை யுலகிற்கட் புலனிற்ருேன்றுஞ்
செப்பருந் தெய்வமன்னுர் சேவடிபோற்ருய் நெஞ்சே. (௩)

வைத்தவ ருளமுவப்ப மலர்நிழல் கனியீயாத
வத்தருத் தன்னைவெட்டி யழலிடுமாபோ லீன்று
கைத்தலத் தேந்திக்காத்த காதற்ருய்பிதாவை யோம்பாப்
பித்தரை யத்தன்கொன்று பெருநரகழற் சேர்ப்பானே. (௪)

ஈன்றவர் நம்மாலுற்ற வெண்ணரு மிடர்கட்கான்ற
மூன்றுல கமுமொப்பாமோ மூப்பினுலிளைப்பா லன்னுர்
கான்றவன் சொற்கள்கன்னல் கான்றவின் பாகெனக்கொண்
டேன்றுகோ லென்னத்தாங்கி யூழியஞ்செய்யாய் நெஞ்சே.(௫)

ஈங்கெதி ருதவி * வெஃகா தெவருமோ ருதவிசெய்யா
ரோங்குசேய் வாழும் † வீயு முடலெய்க்கும் பொழுதுதம்மைத்
தாங்கிடுந் தாங்காதென்னுந் தன்மைநோக்காது பெற்ருேர்
பாங்குடன் வளர்க்குமன்பு பரவலாந் தகைமைத்தன்றே.(௬)

மண்ணினி லன்னைதந்தை மறமறஞ்செயினு நோன்பு
பண்ணினு முடல்வருந்தப் பணிபுரியினு மருந்தொன்
றுண்ணினுங் களிக்கினுந்துன் புற்றயரினு மனத்தொன்
றெண்ணினுந் தம்பொருட்டன் றின்சுதர் பொருட்டாலன்ருே.

ஐயமெய் யம்மணத்தோ டழுவதையன்றிப் பேசச்
செய்யவொன் றறியாநொய்ய சிற்றுடற்சேய் வளர்ந்திங்
குய்யவேண்டுவன செய்தா ருயிரினு மினிதாக்காக்கும்
பொய்யிலன்புடைத் தாய்தந்தை போல்பவருளரோ நெஞ்சே.

மனையவள் வீயின்வேருேர் மனைவியைக் கொள்ளலாம்பெற்ற
தனையராதியரிறப்பிற் றனித்தனி பெறலாம் பின்னும்
புனைபொரு ணீங்கின்மற்ருேர் பொருளையும் பெறலாமத்த
னனையிறந் திடின்வேறத்த னன்வருவாரோ நெஞ்சே. (௯)

---

* வெஃகல் - விரும்பல். † வீதல் - சாதல்.

வேறு.

ஒருத்திபஞ்சகாலத்திற் ருதைக்குத்தன்முலைப்பா லூட்டிக் காத்தா, ளொருத்தமிசைத்தந்தையினைச் சுமந்தோடியொருவ னென்று ரிடரைத்தீர்த்தா, ளொருத்தன்றன்றந்தைக்கே யுயிர்கொடுத்தா னெனப்பலவா வுரோமைநாட்டின், சரித்திரஞ் சொல்வதையறிவாய் நெஞ்சமேயீன்றோரைத் தாங்குவாயே.

எ-ம், அதிகாரம், பிதாமாதாவைவணங்கல் முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம், எ-க்குத் திருவிருத்தம் (எஎ)

---

அ-ம். அதிகாரம்.

## பாலரைவளர்த்தலும் படிப்பித்தலும்.

அயற்பொரு ளிரங்கவ ரரதனங்கள் போற்
செயப்பிறி தறிகிலாச் சேயர் சுற்றுளோர்
கயப்புறுந் தீச்செயல் கற்கையா லவர்
நயப்புறுஞ் சேர்க்கையை விலக்க னன்றரோ. (க)

வளையி ளமரந்தனை நிமிர்த்தல் வாய்க்கும்பொன்
னிளகிய பொழுதணி யியற்றலாகு நல்
வளமுறு கேள்வி நூன்மாண்பு நற்குண
மிளமையி லன்றிமூப் பெய்தி னெய்துமோ. (உ)

மாவினு விருவரு மருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பியா துயர்
தாலமேற் செல்வமா வளர்த்தறங் கட்டோர்
காலனை வளர்க்கின்ற காட்சி போலுமே. (௩)

தீதுநன் றறிகிலாச் சேயரென் செய்வார்
கோதற வவரை நன்னெறியிற் கூட்டிடா
தேதங் கள்வர்முன் செய்திழிவைக் கற்பிக்குந்
தாதை தாய் புதல்வர்க்குச் சத்துருக்களே. (ச)



சுகமுறு வாழ்வில வெனினுந் தோன்றற்குச்
சகமகிழ் கலையறந் தனைப் பயிற்றுத
லகநினைந் தருதரு மரதனந் தனை
யிகபர மிரண்டினை யீத லொக்குமே. (ரு)

கலைபயிற் ருதுகா தலர்க்கு மாநிதி
நிலையென் வளிக்குத னெறியில் பித்தர்க்குக்
கொலைசெய் வாளீவதுங் குழவி தன்னைமா
மலையினோ ரத்துவைப் பதுவு மானுமே. (௬)

பயிர் களையெடுத்திடப் பலனளித்தல் போற்
செயிரினைக் கடிந்துநற் செயல்வி யந்தருந்
தயையொடுஞ் சேயினை வளர்க்குந் தந்தைதாய்
துயருறு வண்ணமத் தோன்றல் காக்குமே. (எ)

நிதிசெல வீாய்க்கெடு நீசர் வவ்வுவர்
மதியினை மயக்கிவெம் மறம் விளைத்திடுங்
கொதியழ னரகிடுங் குணமுங் கல்வியும்
விதிதரும் பதிதரும் வீடு நல்குமே. (அ)

புவிநடை கடவுண்மெய்ப் போதமன் பறஞ்
செவியினோ தாதொரு சேயைப் பார்விட
லவியென வூருமா றறிகி லான்றனைக்
* கவியமில் புரவிவைத் தோட்டுங் காட்சியே. (கூ)

தீயராய் வறியராய்ச் சிலர் வருந்தலுந்
தூயராய்ச் சிலர்புவி துதிக்க வாழ்தலுந்
தாயினுற் றந்தையாற் சமைந்த தன்மையாற்
சேயரை நன்னெறி செலுத்தன் மேன்மையே. (ம)

அ-ம், அதிகாரம், பாலரைவளர்த்தலும் படிப்பித்தலும், முற்றுப்பெற்றன. ஆக. அதிகாரம்,அ-க்குத்திருவிருத்தம். (அஎ)

---

* கவியம் - கடிவாளம்.

கூ-ம், அதிகாரம்.

## மாதரைப்படிப்பித்தல்.

கல்வியே யறவழி காட்டு மாண்மகன்
செல்வழி யறிந்திடான் வித்தை தேருமு
னல்வளர் கூந்தலா ரரிய நூலின்றி
நல்வழி யுணர்ந்ததி னடக்கற் பாலரோ. (க)

பெண்மகள் கெடுவளென் றஞ்சிப் பெற்றவ
னுண்மை நூலவட்குணர்த் தாமை தன்மனைக்
கண்மறு புருடரைக் காணு மென்றதை
யெண்மை யாத்தவன் பறித்தெறித லொக்குமே. (உ)

காவலன் பயத்தினாற் கற்பைக் காக்கின்ற
பாவைய ரரியநூற் பயன் றெரிந்திடிற்
பாவ புண்ணியநெறி யறியும் பண்பினாற்
சீவ னீங்கினு மயலாரைச் சேர்வரோ. (ங)

பொருந்து நற்கலைதெரி பூவை கற்பது
திருந்தியே மிகுமலாற் றேய்ந்து போமெனல்
வருந்திடா துயிர்தரு மருந்தை மானிட
ரருந்திடிற் சாவரென் றறைத லொக்குமே. (ச)

முட்டவரே நடக்கினு மூங்கை பேசினுந்
திட்டமோ டந்தகர்வழி தெரிந்து செல்லினு
மட்டமி லனையர் நூல்வாசி யாரெனி
லட்டமின் னெறிதெரிந் தமையற் பாலரோ. (ரு)

அரிவைய ரேசமு சாரவல் லினில்
விரிசுடர் விளக்கென விளங்கு வாரவர்க்
குரியநன் னூலுணர்த் தாமை கூடையா
லெரியொளி விளக்கினை மறைத்த லேய்க்குமே. (சு)



நீதிநான் மைந்தர்க்கு நிகழ்த்தி மென்மல
ரோதியர்க் கோதிடா தொழித்தன் மெய்யினிற்
பாதியை யேயலங் கரித்துப் பாதிமெய்
மீதினி லணியின்றி விடுத்த லொக்குமே. (எ)

இக்கினை நகுமொழி யெழின்மின் னாரினும்
மக்கண் மிக்கோரெனன் மடமையா மிரண்
* டக்கமு மொக்குமே யன்றி நல்லக
ணெக்கண் மற்றெக்கணே யிழி வுடைக்கணே. (அ)

வேறு.

கலையுணர்ந் தறியாதவோர் கன்னியை
யுலைவுறுஞ் சமுசாரத்தி னுய்க்குத
னிலையுணர்ந்தற னீந்தறி யான்றனை
யலைகடற்க ணமிழ்த்தலை யொக்குமே. (கூ)

வேறு.

நல்லறிவேயணி நன்னுதலார்க் கஃ
தில்லவரோமெமி யைந்து கலத்தல்
புல்லுயிர்நீங்கு புழுக்கொள் சவத்தைக்
கல்லுருவைப்புணர் காம நிகர்த்தே. (௰)

கூ-ம், அதிகாரம் மாதரைப்படிப்பித்தல் முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம், கூ-க்குத் திருவிருத்தம் (கூஎ)

௰-ம், அதிகாரம்,

## சகோதர ரியல்பு.

தந்தைதா யொருவர்தம்மைத் தாங்கிய வுதரமொன்று
முந்தவின் பாலருந்து முலையொன்று வளருமில்லொன்
றிந்தவா றெல்லாமொன்று மியைந்தசோதர ரன்புற்றுச்
சிந்தையுமொன்றிப்பாலுந் தேனும்போல் விளங்கனன்றே. (க)

* அக்கம் - கண்.

வேறு.

ஆதரை மிசைநர ராய யாவருஞ்
சோதர ரெனமிகத் துன்ன னன்றென
வேதமே யோதுமேல் விளங்குஞ் சோதரர்
மீதமை நட்பினை விளம்பல் வேண்டுமோ. (உ)

பயந்தவர் சோதரர் தமரைப் பண்பொடு
வியந்து பேணுதவன் வேறுளோர் களை
யியைந்து பேணுனென வெண்ணி நீக்குவ
ருயர்ந்தவ ரவனொடு முறவு தன்னையே. (௩)

ஒற்றை யொண்சுடரினை யொழிக்கு மெல்வளி
கற்றையாப் பலசுடர் கலப்பின் மாவளி
சற்றும் வெல்லாது சூழ்தமர் சகோதரர்
பற்றொடு மருவிடிற் படரு ருர்களே. (௪)

ஓரிழை யறுத்திட லெளிதொன் றுகவே
சேரிழை பலவுறத் திரித்ததாம் பினை
யாருமே சிதைத்திடா ரமை சகோதரர்
சீரொடு பொருந்திடிற் றிறல்கொள் வாரரோ. (ரு)

ம-ம், அதிகாரம், சகோதரரியல்பு முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ம-க்குத் திருவிருத்தம் (ஙஉ)

---

மக-ம், அதிகாரம்.

## புருடபாரியரியல்பு.

ஆவியின்றியுடலில்லை யுடலின்றியாவியில்லை யதுபோற்பத்
தா, தேவியெனுமிருவர்சேர்ந் தோருருவாஞ்செழுமலருந் தே
னும்போல, மேவியவரிருவருமே நள்ளாதுமுரண்செய்யில் வி
ளங்குமெய்யுஞ், சீவனுமொன்றேடொன்று போராடியழிந்
ததொக்குஞ் செப்புங்காலே. (க)



மணியுமொளியும்போலாண் மகனுமனைவியும்பொருந்தி வா
முவாரேற், பிணியுறுமாதுலரெனினும் பெருஞ்செல்வர்நகுல
மும்வெம் பெரும்பாம்பும்போற், றணியாதபகையுற் று நள்ளா
ரேலுயிரற்ற சவத்தின்மீது, பணிகண்மிகப்பூட்டி யலங்கரித்த
லொக்கு மவர்செல்வப்பயன்றுனம்மா. (உ)

தந்தைதாய்சோதரருற் றுரையெலாங்கைவிடுத்துத் தன்னை
ச்சார்ந்த, பைந்தொடியையனையவர்போ லாதரிக்கக்கணவனு
க்கே பரமாமாதி, யந்தமிலான்முதற்றெய்வம் பதியிரண்டாந்
தெய்வமென வன்பினேடு, சிந்தைதனினினைந்துருகுஞ் சேயி
ழைபூவையர்க்கெல்லாந் தெய்வமாமால். (௩)

தவனுட்டியிருவரினற் குணமுளாரிலரென்னுந் தன்மைநோ
க்க, னவமணஞ்செய்முன்னன்றிப் பின்னுன்னிற்பயனுளதோ
நாவாய்தன்னை, யுவராழிநடுவினினன்றன் றெனக்கைவிடத்
தருமோ வுடல்பன்னோய்சேர்ந், தவயவங்கள் குறைந்தாலு
மதையோம்பா தெறிவரோவவனிமீதே. (௪)

கொழுநனுயினுமனையா யினுமியல்பில்லாரென்னிற் கூறி
ன்சொல்லாற், செழுமைநெறியினிற்றிருப்ப வேண்டுமிதத்தா
ல்வசமாஞ் சினவிலங்கு, மழல்வதினுற் றுன்பமிகு மல்லாதுப
யனுளதோ வருநோயுற்ற, விழிமிசைநன்மருந்திடா தழற்பிழ
ம்பவிடிலந்நோய் விலகுங்கொல்லோ. (ரு)

தந்தைதாய்சோதரரை நீங்கிமின்னுரொருவன்கை தன்னை
ப்பற்றிப், பந்தமுறலாலவ ரெல்லாரினுமிக்குரிமையுளான் பத்
தாவன்றே, விந்தநிலையுணராம லவனையிகல்செயுமேழை யிக
பரத்தை, நிந்தையுறவழித்தலாற் றன்னைத்தான் கொலைசெய்
தனிகர்க்குமாதோ. (சு)

பொய்யானநாடகத்திற் பதிமனைபோல்வேடமுற்றோர் பூண்
டகன்மஞ், செய்யாரேனைக்கிடமா முலகறியமணவாளன்
றேவியென்ன, மெய்யாவுற்றோர்தம்மு ணட்பிலரேற்பிரபஞ்ச

விநோதக்கூத்தைக், கையாற்கொண் டாட்டுவிக்கும்பரனவரை யழற்புகுத்திக்காய்வானம்மா. (எ)

பரவுசமுசாரமெனும் பண்டியில்வாழ்வெனும்பொருளைப் பரப்பிப்பூண்ட, புரவிகள்போற்காந்தனுங் காந்தையுமமைந்தார் மனமொத்தோர் போக்கைநாடி, விரவொடுமேகாரென்னினூர்தியொடப்பொருள்விளியும் விண்புரக்கும், பரமனெனுஞ் சாரதியப் பரிகண்மேற்சினமுற்றுப் படர்செய்வானே. (அ)

உறவினரெல்லாங்கூடி மணவிழாச்செய்துரியோ னுரிமையென்னப்,பெறலரும்பேர்பெற்றுமொருவரையொருவர்பேணாரேற் பெருமையென்னோ, வறயறிவிலாவெனினும் விடாநட்புற்றாண்பெண்ணா மமைந்துவாழும், பறவைமிருகங்களைப்பார்த்தாயினு நன்னேயமன்னோர் பயிலனன்றே. (கூ)

தாங்குபொருள் சுட்டழித்துத் தானுமழியுங்கனல்போற் றலைவனெஞ்சைத், தீங்குகளாற்சுடுமனைவி தன்வாழ்வைக் கெடுத்தலாற் செழுங்கண்டத்திற், றூங்குதிருநாணினா லென்ன பயனதைக்கழுத்திற் சுருக்கிக்கொண்டு, தேங்குமுயிர்ப் பொறைநீக்கிற் பூமகடன் பெரும்பொறையுந் தீருமன்றே. (௰)

அனைதந்தை யில்லத்துஞ் சுகமில்லைநமக்குரியா ளானபின்னர், மனைதாங்கல் சூதகஞ்சூல்சேய்பெறுதல் வளர்த்தலொடு மாமன்மாமி, யினையவரை யுபசரித்தல் விருந்தோம்பனம்பணிக ளியற்றலென்னும், வினைகளினா லயர்மனையைப் பரிவுடனாதரவுசெய்ய வேண்டுநெஞ்சே. (௰க)

தந்துணைவர் வடிவிலாமுடவரெனினுந் திருவின் றனையனைப்பா, மந்தமுளா ரயற்குமரரெனினும்விட மனையரா மருமணாளர், வந்தமுதுண் டுறங்கியபின்றாமுண்டு துயின்றுமுன்னம் வல்லெழுந்து, பந்தமுறுங்கருமமெலா முடிப்பர்கற்பினணிபூண்ட படைக்கண்ணாரே. (௰௨)



வினைப்பகைதீர் பெரியரில்வாழ் வினிற்கலந்துநின்றாலும் வேதநாதன், றனைப்பரவி நினைத்தலென்று மொழியார்போற் கற்பின்மிக்க தையலார்தம், மனைப்பணிகள் செய்தாலுந்துயின்றாலுங் கனவினுந்தம் மணாளர்மாட்டு, நினைப்பொழியார் கணவருட னவர்மனமொன்றாய்க் கலந்து நிற்குமாதோ. (௰௩)

ஏந்தலார்தந்தையைத் தாய்சகியர் கோயிலைவிட்டோ ரெளியர்சிற்றிற், சார்ந்தனனென் றிகழுமின்னே சிற்றில்லாலவரருகே தங்கப்பெற்றேன், சேர்ந்தமிடியா லவர்தம்பணியாவுமென்கையாற் செய்யப்பெற்றேன், பாந்தவமீதின்றியெந்தையன்னையவே றாக்குநிதி பாழ்த்ததன்றோ. (௰௪)

முதல்வியவ டுணைவனே தெய்வமென்றா ளவன்சிற்றின் மோக்கமென்றா, ளதிலவனோ டுறைதல்சாலோக சாமீபமென்றா ளவன்கைதீண்டி, மதமொடுமேயடித்தல் சாரூபசாயுச்சியமென்றாண் மயற்பேய்கொண்டாள், பதவியெலா மீன்றோர்பா விருக்கநண்ப னொடுமெலிந்தாள் பசிநோயுற்றே. (௰௫)

வேறு.

உண்ணல் பூச்சூடனெஞ் சுவத்த லொப்பனை
பண்ண லெல்லாமவர் பார்க்கவே யன்றோ
வண்ணறன் பிரிவினை யறிந்துந் தோழிநீ
* மண்ணவந் தனையிது மடமை யாகுமே. (௰௬)

கதிரவ னனையதங் கணவரேர் முக
மெதிருற மலருமற் றேதிலார் முக
மதிநோக் கிடவிதழ் வாடிக் கூம்புமால்
சதியர்வாண் முகமெனுஞ் சலசப் பூவரோ. (௰எ)

மிடியுளார் கேள்வரென் றுரைத்த மின்னனாய்
கடிநகர் சிறுகுடில் காந்தர் வேந்தரா
மடியளே குடியவ ரன்பென் செல்வமாங்
குடியிறை யென்னிறை குறையுண்டோ சொலாய். ()

---

* மண்ணுதல் - அலங்கரித்தல்.

தோழிகே ளுனக்குமோர் துணைவ னுண்டவன்
வாழி தயத்தினுன் மற்ற மாதரைப்
பாழினி னினைக்கின்றாய் பாவி நெஞ்சுனக்
காழிசூ ழுலகினி லனந்தமோ சொலாய். (௰௯)

இங்கிரு பொருள்வயி னேகுவே னென்றீர்
தங்குவ துடலொன்றே தளர்நெஞ் சோடுயி
ரங்குறு நாசமே யபலமெய் யிதன்
பங்கதாம் பழியுநும் பங்க தாகுமே. (௨௰)

விரியுல கழியினு மிறைகள் சூழினுஞ்
சுரிகுழற் கற்பினர் துணைவ னேயமும்
பிரிவிலா வாழ்க்கையும் பெறுவ ரேலவர்
பரிவெலா மிரவிமுன் பனியி னீங்குமே. (௨௧)

தினவினை செயவகல் செல்வ முன்னந்நா
தனம்வரு மதினொடு மடைகிலா யெனின்
மனம்வரு முயிர்வரும் வராத மெய்விலங்
கினமுறு வனமுறு மினம் வருந்தவே. (௨௨)

வேறு.

இந்தவுட லுளமைம்பொறி யின்னுயிர்யாவு மணஞ்செயு, மந்தநன்னாளினி லில்லவட்கன்பொ டளித்தனன்யான் பொதுப், பைந்தொடியே யுனைச்சேர்ந்திடப் பாரிலெனக் குடல்வேறிலை, சிந்தைபுலன்களும் வேறிலை சீவனும்வேறிலை செல்வையே. (௨௩)

வேறு.

அந்தநா ணடந்திலாத யானகன்ற நெடுவழி
யெந்தவாறு சென்றதென்ன வெனவினவு * சிலதிகேள்
பந்தவூர்தி யேறியே படர்ந்தனன் படர்ந்தநாள்
வந்தபீழை யாவுமன்பர் † மந்தகாசந் தீர்த்ததே. (௨௪)

* சிலதி - தோழி. † மந்தகாசம் - புன்னகை.



திருவனு யெனப்புகழ்ந்து தேவியை விளிக்கமா
மருமலர் துறந்துனெஞ்சின் வாழ்ந்ததென்ன வழுதன
ளுருவமாதை யொப்புரைக்க வழுதுவாடு நங்கையா
முருவமாதர் பெயருரைக்கி னுயிர்துறப்ப ணெஞ்சமே. ()

பூணலங்கன் மார்பினுரை யன்றிவேறு புருடரைக்
காணநோக்கி லேனினைந்து கழறநெஞ்சு வாயிலேன்
பாணவேறு பொறியிலேனை நடனம்பார்க்க வரவெனு
நாணமின்றி யெயுரைத்த நண்பர்வம்ப ரேகொலாம். ()

வேறு.

ஓவியர்தீள் சுவரெழுது மோவியத்தைக் கண்ணுறுவான்
றேவியையா மழைத்திடவாண் சித்திரமே னன்பாரேன் [ள்
பாவையர்தம் முருவெனினீர் பார்க்கமனம் பொறேனென்று
காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால். (௨௭)

திருவென்ன வெனைநினையார் சீர்கேடியென நினைந்து
பொருள் வயினேகிடச்சீவன் போல்வாரே யுன்னுதலா
லொருதரமோ பலதரநீ யோவக்கா ளக்காளென்
றிருவினையேன் றனையழைத்த விழுக்கன்று பைங்கிளியே. ()

நள்ளிரவிற் றமயந்தி நளன்றனையே பிரிந்தபின்னுந்
தெள்ளுயிர் நீங்கிலளென்னச் சேடிநீ பொய்யுரைத்தா
யுள்ளுயிரே பத்தாவா வுடையகற்பி னார்க்கவன்றான்
றள்ளியகன் றால்வேறு தனியுயிரே துரையாயே. (௨௯)

நரபதிநீ யானுலு நண்பரின்பா தத்துகட்குன்
சிரமகுட நிகராமோ சேர்கிலையேற் கொல்வனெனக்
கரவானை யுருவினின்றாய் கற்பினுக்கோர் குறையின்றித்
தரமாநீ யெனைக்கொல்லிற் றந்தைதாய் குருநீயே. (௩௰)

அன்பருண்ணி லென்பசிபோ மவர்களிக்க யான்களிப்பேன்
றுன்பமவ ருறில்யானுந் துன்புறுவே னுதலின

லென்புடல்வேறெனினு மெமக்கின்னுயிரொன்றெனவறிந்தே
ன்,பின்பவர்தா மென்னைவிட்டுப் பிரிவதெவ்வா றுரைசகியே.

பொன்னகையி லாயெனச்சொல் பொற்றொடியே பரத்தைய
யந்நகைக ளுரியவையா மச்சநாணமடம் பயிர்ப்பு (ர்க்கே
மின்னகையாங் கற்பினர்க்கு மேதினியு நீசொலுமப்
புன்னகையு நண்பரினோர் புன்னகைக்கு நிகராமோ. (௩௨)

செழுமுளரி புனனீங்கிற் செழிக்குமோ படர்கொடிகள்
கொழுகொம்பைப் பிரியின்வளங் கொண்டுய்யுமோ கணவ
ரழுதயரவைதாலு மரந்தைபல வியற்றிடி னுந்
தொழுதகுகற் புடையார்தந் துணைவரைவிட் டகல்வாரோ. ()

பேதைமதி யுற்றனையென் றெனையிகழும் பெருந்தகையென்
காதலியைப் பிரிந்திந்தக் காயமொன்றே யுயிருநெஞ்சு
மாதவள்பா லுறையுமன்றண் மனமுயிரென் பாலுறையு
மாதலினன் பேதைமதி யாயினனென்பது நிசமால். (௩௪)

உரனுடுமா மதுகையினை யுலகமெலாந் துதித்தாலும்
பெருமிதங்கொள் ளேமறியாப் பேதையெனு நந்துணைவி
யொருசிரக்கம் பிதஞ்செய்யி னுடலெலாம் பரவசமாம்
பருவமதிற் சிறியாளிவ் வசியமெவண் படித்தனளால். (௩௫)

வேறு.

வினையில் வென்றி யிலர்திங்கு மீண்டதற்
கினன் முனிந்திடு மென்றஞ்சிலேம் வசை
தனையு மெண்ணி லந்தாரந் திறலிலே
மெனநகிற் செய்வ தென்சொ லிதயமே. (௩௬)

இரிஞ ராலுறு மெவ்வமுந் தேகமார்
பெரிய புண்களும் பேசருந் துன்பமு
முரிமை வாண்முக நோக்க வொழிதலாற்
பிரியை நோக்கம் பெருமருந் தாமரோ. (௩௭)



எழிலி லாளில் லவளெனும் வேசிதேன்
மொழி முகத்தை மதியைமுன் னுன்முகன்
சுழித ராசினிற் றூக்கத்தட் டோடும்ப
ரெழுகி சாபதி யின்னுமிங் கெய்திலான். (௩௮)

௰௧-ம், அதிகாரம் புருடபாரியரியல்பு முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம் ௰௧-க்குத் திருவிருத்தம் (௱௪௰)

௰௨-ம், அதிகாரம்.

## வி ப ச ா ர ம்.

பண்டோராண் பெண்ணமைத்தவ் விருவருக்குமணமியற்றிப் பரனிரக்கங், கொண்டளித்த முறைகடந்து கள்ளவழிப் புணர்ச்சிசெயுங் கொடியோர்தம்மை, மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ வவர்தலைமேல்வானுலாவுங், கொண்டலே பேரிடியை வீழ்த்தாயோ விதுசெய்யிற்குற்றமுண்டோ. (௧)

வேறு.

ஒருவரு மறிகிலா ரெனவோ ரொண்ணுதல்
கரவயற் குமரரைக் கலந்தல் பூசைதன்
னிருவிழி மூடிமற் றெவர்கள் பார்வையுந்
தெரிகிலா தெனப் பயன் றிருடலொக்குமே. (௨)

அன்னிய ரெம்மியை பன்றிச் சேர்ந்தன
ரென்ன மின்னிடையவ ரியம்பல் சோரர்கள்
பொன்னையாம் வவ்விலேம் பொருள்வந் தெங்களை
முன்னை வவ்வியதென மொழித லொக்குமே. (௩)

மனமகிழ் வாயயன் மைந்தர் தம்மொடுந்
தினமுறை யாடிடுந் தெரிவை கற்பது
புனலுறு முப்பினைப் போலு மென்மெழு
கனலுற லென்னவு மழிவ துண்மையே. (௪)

வலதுகை துணைவனு மற்றோர் கைமனை
தலைவன்செய் தொழிலெலாந் தார மாற்றுத
ற்றலைவிலா வலக்கையின் றொழி லிடக்கர
நிலமிசை செய்தென நிந்தை மேவுமே. (௫)

உண்டவர் தமைக்கொலு மோத வெவ்விட
மண்டினோர் தமைக்கொலு மாளி கையினற்
றண்டினோர் தமைக்கொலுஞ் சற்பந் தையலார்
கண்டவர் நினைப்பவர் தமைக்கொல் காளமே. (௬)

நிலையில் சிற்றின்பத்தி னேயத் தாற்றின
மலைவுசெய் பவந்தனை யாற்றல் கொள்ளியாற்
றலையினைச் சொறிதலுந் தகிக்குந் தீயினை
யெலியினுக் கஞ்சி யில்விடலு மேய்க்குமே. (௭)

மின்னெரி மூட்டிடு விறகுபோற் சுவைக்
கின்னலைப் பழித்தசொல் லாரைக் காணலுந்
துன்னலு முன்னலுஞ் சுடுவெங் காமத்தீ
தன்னையே மூட்டிடுஞ் சமிதை போலுமே. (௮)

உணர்வறுஞ் செல்வமு முயர்வு மேயறுங்
குணமறுங் குலமறுங் கொடிய நோயெலா
மணவுறு நரகுறு மாயுடேயு மால்
கணமறு மாதர்தோள் கலக்குந் தூர்த்தர்க்கே. (௯)

வேறு.

உவர்ந்து தன்னுள்ளத் தோங்கிய கற்பிலாச்
சிவந்த வாயுடைச் சேயிழை யைப்பதி
யிவர்ந்து சேமஞ்செய் தெய்க்குதல் பட்டிகள்
கவர்ந்த பின்பொருட் காவலை யொக்குமே. (௰)

ஓயப்பாரி லுறுந்தெவ்வர் தம்மொடு
மேயப்போரி லெதிர்ந்திட வென்றியா



மாயப் போர்செய் மடந்தையர்க் குப்புற
மாயப் பாற்செல வென்றி யமையுமே. (௰௧)

வேறு.

கொழுந னறியிலுயிர்க்கொலையாங் கோவாக்கினையாம் பெரும்பழியா, மழல்போனெஞ்சைச் சுடும்பயத்தோ டயலாடவரை யொருபேதை, தழுவியின்ப முறன்மதமா தானுண்டகல்வா யிடையொழுகுங், கழையின்சாற்றை விழைந்ததன்பாற் கடுநிகர்க்க லேய்க்குமால். (௰௨)

வேறு.

மற்றொருவனைச்சேர் மாதிறந்தாலும் வசைநிற்கு முலகமுள்ளளவுஞ், சுற்றமும்வாழ்வுந் துணையுமேநீங்குஞ் சோர்நாயகனுமே மதியான், பெற்றசந்ததியு மிழிவுறுமாண்ட பின்னவியாவெரி நரகஞ், சற்றுநேரங்கொள் சுகத்தினல்விளையுந் தன்மையீ தறிவையீருணர்வீர். (௰௩)

வேறு.

ஓர்பிழை குருவேசெய்யி னென்பது பிழைகள்செய்ய
நேர்சிறு சீடரென்ன நிதம்பதி பலமின்னார்தோள்
சேர்வது காணுமில்லா டினம்பல புருடர்ச்சேர்தல்
சீரெனவுன்னி யன்னன் செலவுபார்த்திருப்பண் மாதோ. ()

தன்னைப்போற் பிறரையெண்ண றகுதியாந் தான்மணந்த
மின்னைப்போ லிடையினாளை விழியினா னோக்குவோரைத்
தின்னல்போன் முனிவுகொள்வோ ரயலவன்றேவி தன்னை
யன்னைசோ தரிபோலெண்ணு தணைந்திட விரும்பலென்னே.

௰௨-ம். அதிகாரம், விபசாரமுற்றுப்பெற்றது. ஆக, அதிகாரம், ௰௨க்குத் திருவிருத்தம், ௱௫௫.

௰௩-ம். அதிகாரம்.

## உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் தாங்கல்,

வாழகமும்புனை தூசணியும்பல வாகனமஞ்ச மொடுஞ்
சூழ்பொருளுஞ்சுவை சேரமுதுங்கமழ் சோலையு மாசுகமுங்
கீழவராலவர் தாமிலரேன்மிகு சேவலமா யுலகம்
பூழதுவாமத ஞலருடானவர் பாலுறுவாய் மனனே. (௧)

வேறு.

நாதனே யுயர்வாந்தந்தை நரரெலாமன்னன் சேயர்
பூதலப்பொருள்கள் யார்க்கும் பொதுமையல்லாது சொந்தச்
சாதனப் பொருள்போற் செப்புச்சாசனம் பெற்றோரில்லை
யாதலிற் ருழ்ந்தோர்தம்மை யருஞ்செல்வர் தாங்கன்மாண்பே.

நயமறங் கல்வியின்றி நனிநிதியாற் குலத்தால்
வயதினற் பெரியரென்னன் மைந்தர்தந் தையின்ருளேறி
யியலித்தாம் பெரியோரென்ன வியம்பலுங் காலைமாலை
யுயர்கிழ லுள்ளோர்தம்மை யுயர்ந்தவரெனலு மொப்பே. (௩)

ஏலிராட் டினவூசற்க ணேறியே சுற்றுங்காலை
மேலவர்கீழுங் கீழோர் மேலுமாய்ச் சுழலல்போல
ஞாலமீ தின்றுயர்ந்தோர் நாளையே வறியராவர்
சீலநெஞ்சினர் கீழோரைச் சினந்திகழார்கண் மாதோ. (௪)

மக்கள்யா வருமோரன்னை வயிற்றிடை யுதித்தலாலிச்
சக்கரந்தனி லெல்லாருஞ் சகோதர ராவர்சீரின் [ன்ப
மிக்கவர் தாழ்ந்தோரென்னல் வெறும்பொய்யா மேன்மையெ
தொக்கவே பிறப்பிறப்பி லுறுங்கொலோ வுரையாய்நெஞ்சே.

* சிலதரு நரரேயங்கஞ் சீவனெஞ்சவர்க்கு முண்டா
நலநவை யின்பதுன்ப நானிலத்துள வவர்க்கு

* சிலதர் - ஏவல்செய்வோர்.



நிலமிசை யவரைச்செய்தோ னித்தனே யவரையேதும்
புல்னிலாப் பொருள்போலெள்ளும் புல்லர்வீடில்லர் மாதோ.

கொற்றவர் நரர்க்குழைத்துக் கூலியா மிறையைக்கொள்வர்
மற்றவ ரெவருந்தம்மெய் வருந்தவேயுழைப்பர் செல்வும்
பெற்றவர்களு முழைப்பர் பின்னவர்க்குழைப்பர் சேட
ருற்றவித் தன்மையுன்னி னுழையரார் தலைவராரே. (௭)

உடலுறுப் புகண்மேல்கீழென் றுன்னிடா தோம்பல்போலுந்
தடமலைகொண்ட நீரைத் தாழ்தரைக் களித்தல்போலுந்
தொடர்புறு மேலோர்தங்கைத் தோய்நிதியாவுந் தாழ்ந்தோர்க்
கிடவெனக் கடவுளீந்தா னெனநினைந்திடுவர் மாதோ. (௮)

என்றுமெய் வருந்தவேலை யியற்றுவோர்க் குயர்ந்தோர்சொற்
பொன்றனையீவர் செட்டுப் புரிகின்ற வணிகரென்ன [பப்
வொன்றுகொண் டொன்றையீவோ ருழையரிற் ருமுயர்ந்தோ
ரென்றுகொள்ளெண்ணந்திண்ணமென்னலெவ்வண்ணமம்மா.

ஒளிமுடி யொடும்பிறந்தே யுலகமாண்டவரு மில்லை
யெளியரா யோடொன்றேந்தி யிங்குதித்தவரு மில்லை
குளிர்கட லுடுத்தபாரிற் குறைந்தவர் மேலோரென்னல்
வெளிமயக் கன்றிச்சற்று மெய்யலவுணர்வாய் நெஞ்சே. (௰)

௰௩-ம், அதிகாரம். உயர்ந்தோர் தாழ்ந்தோரைத்தாங்கல்
முற்றுப்பெற்றது. ஆக, அதிகாரம் ௰௩-க்குத்
திருவிருத்தம், ௱௯௫.

௰௪-ம். அதிகாரம்.

## தாழ்ந்தோருயர்ந்தோர்க் கடங்கல்.

விரிசுடர்க்கதி ரோன்மதிதாரகை விலங்குபக்கி மரமலையா
வினும், பெரிதுசின்னதென் ருகியதன்மைபோற் பிழையிலா

ன்வகுத் திட்டவுலகிய, திரிதலின்றி நடப்பதற்காகவே சிறிய ர்மேலவ ரென்னவிங்காயினு, ருரியவிம்முறை யின்படி தாழ்ந் தவ ருயர்ந்தவர்க்குள்ளடங்க லொழுக்கமே. (௰)

௰௪-ம், அதிகாரம் தாழ்ந்தோருயர்ந்தோர்க்கடங்கல் முற்றுப் பெற்றது. ஆக, அதிகாரம் ௰௪-க்குத்திருவிருத்தம் ௱௬௬.

௰௫-ம் அதிகாரம்.

## பொய்.

முன்னமோர் பொய்யுரைக்க வப்பொய்வெளியாகா மன் றூடும்வண்ணம், பின்னுமோர் பொய்யுரைக்க வதையுநிலைநிறு த்தவோர் பெரும்பொய்சொல்ல, வின்னவகை கைதவமொ ன் றிருநூறுகைதவத்துக் கிடமாம்வாய்மை, தன்னையே முன் பகரிற் சங்கடமொன்றிலையதுவே தகைமைநெஞ்சே. (௧)

இழுதைசொல்லி மறைக்கலா மெனுந்திடத்தாற் பாதகங்க ளெல்லாந் தீயர், பொழுதெலாம் புரிதலாற் குற்றங்கள் யாவு க்கும் பொய்பிதாவாம், வழுதொன்றை நீக்கிடிற்றீ வினைக ளெலா நீங்கிடுநல்வுண்மையொன்றே, முழுதுமுண ரறிஞர்க் குத்தோழனு மவர்க்கதனுன் மோசமுண்டோ. (௨)

அங்கதமே பொருளென்னக் கைக்கொண்டோர் மறந்தொ ருமெய் யறைந்திட்டாலு, மிங்கதனை யெவருநம்பார் துணைவி யர் புத்திரர்தமரு மிகழ்ச்சிசெய்வா, ரங்கணுல கெங்கணுமே வசையாகு நரரெலாமகிதராவார், பங்கமுறும் பொய்யரைப் பொய்யருஞ்சேரார் தம்முளமும் பழிக்குமன்றே. (௩)

ஏதேனும் பயன்வேண்டிப் பொய்சொல்லி னப்பொய்தா னெவ்விதத்து, மாதரையில் வெளியாகு மப்பொழுதப் பயன ழியும் வளருந்துன்பஞ், சாதலின்மை வேண்டிவிட முண்ண லொக்கும் பயன்கருதிச்சலமுரைத்த, லாதலினு னுண்மைத னைத் துணைக்கொள்ளி னெப்பயனு மடைவோநெஞ்சே. (௪)

மெய்யரெனப் பெயர்பூண்டார் வறிஞரே யெனினுநிதி மிக வுமன்னுர், கையதனிற் கொடுத்துவைக்க வெவருமஞ்சார் பொய்யரெனக் கவ்வைபூண்டார், செய்யபொருண் மிகவுளா ரெனினுமவர் கையிலொரு செல்லாக்காசு, மையமின்றியொ ருவர்கொடா ரெனிற்படிறின் றன்மைதனை யறைவதெ ன்னே. (௫)

விலங்குபறவையினு நரர்வாக்கொன்றாற் சிறப்புடையர் வி ளங்குந்திண்மை, யிலங்குவாயா லுரையாதவத்தமுரைப் பேர் ருலக மிகழ்விலங்கின், குலங்களினுங் கடையராஞ்சாணம தை யமுதுவைக்குங் கோலச்செம்பொற், கலங்களின் வைத் தலையொக்கு மெய்க்குரியவாயாற்பொய் கழறலன்றே. (௬)

பழியிலா ரொருவர்க்குமஞ்சாது நேர்வழியே படர்வார்வவ் வுந், தொழிலுளார் பகற்கஞ்சுந் * துரிஞ்சில்போ லிட்டிகை யிற் றொடர்ந்துசெல்வா, ரிழிவுளா ரென்பதற்குப் பொய்த்த லே சான்றுகுமேசிறாய், வழியுளா ரென்பதற்குச் சரதமேசா ட்சியா மகியின்கண்ணே. (௭)

அயலார்செய் குற்றங்கள்கூறுமன் மறைத்தலே யறமாமன் னுர், துயருறுவண்ணாம் பொய்த்தாலும் பிழையன்று சொ ந்தமாவோர், பயன்வேண்டிச் சிறியதோர் பொய்சொலினும் பெரும்பழியாம் பார்மேல்கீழா, யயர்வாகப் புரண்டாலும்பிற ர்க்கின்னு தரும்பொய்யை யறையனெஞ்சே. (௮)

பாரினிற்பொய்த்திடல் பொய்க்கவுன்னுதல் பொய்யினைட் பிறர்க்குப் பயிற்றல்யாதோர், காரியஞ்செய்வே னென்னச் சொலித்தவிர்த றனக்கேலாக் கருமந்தன்னை, வீரியமாச்செய் வனென லற்பரையே துதித்தல்பொய்யை வியந்துகொள்ளல்

* துரிஞ்சில் - வௌவால்.

சீரியரையிகழ்தல் பிறர்மீதொருவன் சொலும்பழியைச் செவி
யிற்கோடல். (௯)

தற்புகழ்தல் புறங்கூறன் மிக * விருணம் வாங்குதல் பொ
ய்ச்சான்றுரைத்தல், பற்பலவாக்கட்சாடை சிரகரகம்பிதஞ்
செய்து பசுமைபொய்போற், பிற்பயன்றோன்றிடச் செய்தன்
மெய்யுரைக்க வஞ்சிவாய் பேசிடாமற், சற்பனையா யிருத்தல்
பொய்க்கதைகூறல் கேட்டலெலாஞ் சலங்களாமே. (௰)

வே று.

வியனுல கெங்கணும் வீற்றிருக்கு மோர்
வயமுளான் முனிவிற் கஞ்சாது மாக்கட்குப்
பயமொடு மறுத்தமே பகர்தறே வினுங்
கயவுள்ளார் நரரெனக் கருதல் போலுமே. (௰௧)

௰௫ - ம், அதிகாரம். பொய் முற்றுப்பெற்றது. ஆக,
அதிகாரம், ௰௫-க்குத் திருவிருத்தம், ௱௭௭.

---

௰௬-ம். அதிகாரம்.

## க ள வு.

களவுசெய்குதன் மனத்தினி னினைக்குதல் சுவரென்
றுளமகிழ்ந் துபதேசித்த லுதவிசெய் தொழுகல்
வளமிலாப் பொருண் மாறுதன் மிகுவிலைவாங்க
லளவினுந் நிறைதனினும் வஞ்சித் தபகரித்தல். (௧)

கண்டெடுத்த வோர்பொரு ளனுபவித்தலுங் களவின்
பண்டம் வாங்கலும் வாங்கியகடன் கொடாப்பழியு
மண்டும் வண்பொருளாசை யாற்பொய் வளக்கிடலுந்
தொண்டு செய்பவர் கூலியைக்குறைக்கின்ற தொழிலும். (௨)

* இருணம் - கடன்.



நட்டமே பிறர்க்கெய்திடச் செய்தலு நம்பி
யிட்டர்வைத்த நற்பொரு ளபகரித்தலு மிறப்ப
வட்டம் வட்டிகள் வாங்கலுஞ் சூதிற்பொன்பெறலு
மிட்டவேலை செய்யாதுகைக் கூலிகொள் ளியல்பும். (௩)

கன்னம்வைத்தல் செல்லாப்பணம் வழங்குதல் கள்ள
மன்னுசீட்டை யுண்டாக்குதல் கைலஞ்சம் வாங்க
லென்னும் யாவுமே களவதாமித்தொழிற் கியைவோர்
மன்னராக்கினை வசைநர கடைந்து வாடுவரால். (௪)

திலகவாணுதற் றேவியைச் சேயரைப் பிரிந்து
கல்க வென்னவே யொலிசெய்மா விலங்குகாற்பூண்டில்
வுலகமேசிடச் சிறையகத் துற்றுமண் சுமந்து
சிலுகெலாழுறல் சிறிதுபொன் றிருடலா லன்றோ. (௫)

தள்ளரும் பெரும்பழி யுளாரென்னினுந் தரையி
லெள்ளல்சே ரிழிகுலத்தரே யென்னினு மேசிக்
கள்ளரென் றவர்ப்பழித்திடப் பொருரெனிற் களவிற்
குள்ளபேரவ மானத்தை யுரைப்பதென் னுளமே. (௬)

வே று.

அரிமுழை நுழைதல்போல வயலகம் புகும்போதச்சம்
பொருடிரு டும்போதச்சம் புறப்பட்டேகுங்கா லச்சந்
தெருவினி லெவர்க்குமச்சங் கவர்ந்தன திளைக்கவச்ச
முருமுருக் கொண்டுகள்வ ருளங்குடி கொண்டபோலும். (௭)

நிரந்தரம் பலநோயுற்று நெடிதுபரினுங் கையேந்தி
யிரந்துணப் பெருநிரப்பே யெய்தினும் பகரவொண்ணு
வரந்தை சூழினும்பொன் வவ்வுமத்தொழிற்கியையாவண்ணம்
வரந்தர வேண்டுமென்னக் கடவுளைவருத்தாய் நெஞ்சே. (௮)

௰௬-ம். அதிகாரம் களவு, முற்றுப்பெற்றது, ஆக
அதிகாரம் ௰௬-க்குத் திருவிருத்தம். ௱௮௫.

௰எ-ம், அதிகாரம்.

## கொலை.

உயிரினை வதைத்திடல் வதைக்க வுன்னுத
லயிலெனக் கொடியசொல் லறைத லெற்றல்வேண்
டயிருடை மத்தெனத் * தாபம் பல்புரிந்
தயலவ ராயுளுட் கழிவுண் டாக்குதல். (க)

கருவினை யழிக்குதல் கயமிங் கேனையார்
மருவிட விரும்புதன் மற்றன் ஞேரிட
ரொருவிட வகைசெயா தொழிதல் வெவ்விடஞ்
§ சருவினி லிடர்கொடுஞ் சமர்க் குடன்படல். (உ)

முனைவு கட்காமம்வெம் முரண் முதற்கொலை
வினையினுக் கேதுவாம் வினைக் கமைந்திடன்
மனையினிற் றீயிடன் மண்ணிற் றற்கொல
வினைய யாவுங்கொலை யென்னும் வேதமே (௩)

பெறலரு முயிர்தரும் பிறப்பி லானதை
யறவொரு வழிசெய வாண்மை பூண்டனன்
பறவையை நரர்விலங் கினைப்படுக்கு மோர்
மறவனுக் குலகெலா மறலி யென்பவே. (ச)

கொலைபுரி வோரையுங் குடி வருந்தவே
யலைவு செய்பவரையு மாவி நீக்கிடத்
தலைமுடி தரித்தவர் தமக்கு நீதியா
மிலைகொலை செயுமுறை ‡ யிதர ரார்க்குமே. (ரு)

சுதமுறு முகத்தொடு சொல்லு மாற்றமும்
பதமறு † கறைக்கறை படிந்த வாடையும்

* தர்பம் - துன்பம். § சரு - சோறு. ‡ இதரர் - அன்னியர். † கறை - இரத்தம்.



* வதனையே காட்டலால் வதை மறைக்குத
லுதையனைக் கரத்தினன் மறைத்த லொக்குமே. (சு)

பவமற மாயினும் + பவர்க்க முத்தியாய்ச்
சிவமுறப் பொலியினுஞ் சிதைந் தழிந்தவோர்
சவமுயிர் மேவினுந் தகையில் காதக
ரவனியி லுய்ந்திட லரிது நெஞ்சமே. (எ)

பத்தினி சேயரும் பரி சனங்களுந்
தத்தம நிலைகெடத் தலைவனைச் சம
னொத்தவ னியிற்கொல லொருவன் றன்னையன்
றத்தனை பேரையு மடுதல் போலுமே. (அ)

தீயிடை மூழ்கினேன் சிங்கி யுண்டவன்
மாய்விலா துய்யினும் வதனுய் யானம
னுயதன் செழில்புரி வோனை யன்பொடு
மேயதன் னுலகினுக் கீண் டழைக்குமே. (கூ)

சீவனை வதைசெயல் சிறந்த தாயுங்காற்
பாவமோ ரைந்தினுங் கொலைசெய் பாவியைப்
பூவலயம் பொறு தெறியும் பூதிதா
னுவென் வாய்திறந் தவனை நுங்குமே. (௰)

௰எ-ம், அதிகாரம், கொலை,முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் ௰எ-க்குத் திருவிருத்தம், ாகூ.

௰அ-ம், அதிகாரம்,

## மது.

ஞானமெய்ச் சுகம்புகழ் நலம்பெறத் தனந்
தானமே செய்குவர் தகுதியோ ரறி

* வதன் - கொலை. + பவர்க்கம் - நரகம்.

வினைமெய் மறதிநோ யிழிவுறப் பொருள்
வானென வழங்குவர் மதுவுண் போர்களே. (௧)

மருந்தநேர் மதுவுண்போர் மாண்ட பான்மையா
லருந்தவப் பாலருக் கப்பணி ல்லையால்
பொருந்திய மனையவள் பூண்டநாண் களத்
திருந்ததே யென்னினு மிழந்த தொக்குமே. (௨)

சித்தமு மவசமாஞ் செயல் விகற்பமா
நித்தமு மரணமா நெடிய துன்பமா
மத்தமு நாசமா மவிழ்த மின்மையாற்
பித்தினு நஞ்சினும் பெரிது கள்ளரோ. (௩)

பாலினைத் தேனையின் பாகை நீத்துவெண்
மாலியை மாந்துவோர் மலர்க்கணீத்து மெய்த்
தோலிர ணந்தனைச் சூதகந் தனைக்
கோலியுண் டெக்குமீக் கூட்ட மொப்பரோ. (௪)

சீயென விகழ்தரு தேனுண் போர்களை
நாயெனக் * கோகென வாக்கு நாடொறு
மாயினை மகளையில் லாக்குந் தான்கொண்ட
சேயிழை யையும்விலை செய்யச் செய்யுமால். (௫)

மலந்தனை யமுதென மாந்தச் செய்திடு
மலர்ந்தபூ வெனவன் லள்ளச் செய்யும்வெஞ்
சலந்தரும் பகைவர்கை தன்க்குள் ளாக்குமன்
னலந்தனை யழித்திடு நறவு நெஞ்சமே. (௬)

அலருற வீயெறும் பரவுதே ளொடும்
பலவிலங் கணுகுறப் படுத்த பாயலின்
மலசல வாந்திய மயக்குங் கோடலா
னிலமதி னரகமா நிதங்கள் ளுண்பர்க்கே. (௭)

* கோகு - கழுதை.



கொஞ்சமுஞ் சுவையிலை குளத்தைக் கோணியே
நஞ்சென நுகர்வர்மெய் நலிய மூப்புற
விஞ்சிய வாவறீ வினைகள் யாவுமே
குஞ்சுகள் கள்ளெனுங் கொடிய பக்கிக்கே. (௮)

வேறு.

வறுமையாற் களவுசெய்வர் மையலாற் காமத்தாழ்வர்
குறுமைசேர் பகையினல்வெங் கொலைசெய்வர் வசையினோ
சிறுமைதந் துயிரிருந் துஞ் செத்தவராக்கி யிம்மை [டுஞ்
மறுமையை யழிக்குங்கள்ளை மாந்தலெப்பயன் வேட்டம்மா. ()

வேறு.

நரிநாய் பறவைசூழ வழிநடுவிற் கிடந்தசவமதனை, யுரியாரி
லரென்றிடுகொட்டுக் குடன்கொண்டேகிக் கட்டையில்வைத்,
தெரியாநின்றேன் பிணம்விழித்திஃ தின்றேன்மயக்கென் றிய
ம்பிமெய்கொ, ளரியையவிக்குமுன்ன மெழுந்தயற்கட் கடை
யுட் புகுந்ததுவே. (௰)

௰அ-ம். அதிகாரம், மது, முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் ௰அ-க்குத் திருவிருத்தம். ௨௱௫.

---

## ௰௯ - ம். அதிகாரம்.

## சூது.

வித்தமே மிகுமென வெஃகிச் சூதினி
லத்தமா ரத்தமு மழித்த தீட்டிய
சித்திர மாதெழி னம்பிச்சேர்ந் ததற்
பத்தினி தனையகல் பான்மை யொக்குமே. (௧)
வையமேன் மானிடர் வாழுநாட் சில
வையமில் கேள்விதா னளவி லாருயி

ருய்ய நல்வினைகளை யுஞற்றிடாது நாள்
பொய்யமர் சூதினிற் போக்கல் புன்மையே. (௨)

ஓதரு விசையொடு மோடுநா ளென
மேதையர் தந்தொழில் விடாது செய்குவர்
போது நீட்டித்தெனப் பொறியிலா ரதைச்
சூதெனும் வாள்கொடு துணிக்க நேர்வரே. (௩)

வளமலி நிடதநா டளிக்கு மாண்புசேர்
நளனையு மலைவுசெய் நாசச் சூதுதான்
களவுபொய் சினம்பகை காம மியாவையு
மளவறப் பயிற்றிடு மையன் போலுமே. (௪)

கவறினை யாடுவோன் காந்தை வீயினுஞ்
சவமதிவ் வழிசெலு மென்று தானெழா
னவள்புனை தாலியுந் தயத்துக் காமென
வுவகை பூத்தாடுவா னுயர்வு றுனரோ (௫)

வேறு.

வட்ட மானில மீதுமன்னர் விட
மிட்ட பாலை யினிதளித் தாலெனக்
கட்ட மேவுங் கழகத்தில் வென்றுகொ
ளொட்டங் கையினி லொட்ட மளிக்குமால். (௬)

* இவறலேதந் திழிவையுந் தந்துபின்
றவறி யாவையுந் தந்துநெஞ் சந்தனைக்
கவறென் னேவிக் கலக்கங் கொடுத்தலாற்
கவறெனும் பெயர் காரண நாமமே. (௭)

௰௯-ம். அதிகாரம், சூது, முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௰௯-க்குத் திருவிருத்தம். ௨௱௰௨.

* இவறல் - ஆசை.



உ௰-ம். அதிகாரம்.

## பரிதானம்.

வலியினுவி லஞ்சங்கொள் மாந்தர் பாற்சென்று
மெலியவர் வழக்கினை விளம்பல் வாடிய
வெலிகண் மார்ச்சாலத்தி னிடத்து மாக்கள்வெம்
புலியிடத்துஞ் சரண் புகுத லொக்குமே. (௧)

அல்லினீற் களவுசெய் பவரை வெஞ்சிறை
யில்லிடும் பண்பினுக் கியைந்த மாக்களே
யெல்லினி லெவரையு மேய்த்து வவ்வலாற்
கொல்லினும் போதுமோ கொடியர் தம்மையே. (௨)

கொலைஞருஞ் சோரருங் கொடிய வஞ்சரு
நிலைபெற வவர்கையி னிதியைக் கொண்டுதண்
ணலைகட லுலகிய லழிக்குந் தீயர்பான்
மலையெனப் பாவமும் பழியு மண்டுமே. (௩)

பயிரினை வேலிதான் மேய்ந்த பான்மைபோற்
செயிருற நீதியைச் சிதைத்தோர் தீயன்சாண்
வயிறினை வளர்த்திட வாங்கு மாநிதி
வெயிலுறு வெண்ணெய்போல் விளியு முண்மையே. (௪)

ஆசையால் வாங்கிடு மவனை யீந்தவர்
கேசமா மதிப்பரக் கீணன் சென்னிதம்
மாசன மாக்குவ ரடிமை நானெனச்
சாசன மவர்க்கவன் றந்த தென்னவே (௫)

காசதி கந்தனைக் கருதிவாதந் தீர்த்
தேசுற வேழைக்கட் கிடர்செய்வோன்றன
மீசரங் குறைவுபா ராதுமே விடுந்
தாசியரினு மிழி தகவுளா னன்றே. (௬)

எனதுன தெனவொரு பொருட் கிரண்டுபேர்
சினமொடு வாதித்தோர் தீயன்பாற் செலிற்
றனதென வப்பொரு டனைக்கொள் வானவர்
மனதொரு மித்ததை வகிர்தன் மாண்பரோ. (எ)

பசியினு லெளியனோர் பகலிரப்பினு
* மசியுறு மெங்கனு மாக்க ருள்ளவர்
நிசிபகல் பலரிட நிதமுமேற் கின்ற
வசையினைச் சொல்லவோர் வாயும் போதுமோ. (அ)

பெற்றவன் கைப்பொருள் பிள்ளைக் கேயலான்
மற்றவர்க் கிலையெனன் மனுவி னீதியாங்
குற்றமே விடநிதி கோடிபேர் கையிற்
பற்றுவோ னவர்க்கெலாம் பாலன் போலுமே. (கூ)

வேறு.

மண்டலீகன்றன் றண்டனை நரகவ மானங்
கண்டபேர்க் கெலாம் பயம்பெரும் பகையொடுகவ்வை
பண்டமிவ்வகை யீட்டலின்னனுதினம் பலரை
யண்டி மானமாத் தொண்டுசெய் துயிருயலழகே. (௰)

வேறு.

இருவரிடத்தும் விவாதநிதிக் கிரட்டிகொள்வர் தகாதென்னி, னருமைசய மென்பார்தோல்வி யடைந்தோன் றந்தநிதி கேட்பின், வெருவ வவன்மேற்பொய்வழக்கை மெய்போற்கற்பித்திட ரிழைத்துச், சருவகொள்ளை யடிப்பர்பரி தானம்வாங்கும்பாதகரே. (௰க)

உ௰-ம், அதிகாரம், பரிதான, முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், உ௰-க்குத் திருவிருத்தம். உ௱உகூ

* அசி - அவமதிச் சிரிப்பு.



உக-ம், அதிகாரம்.

## புறங்கூறல்.

சாம்பிண மிடுவனஞ் சாருந் துர்மணம்
பூம்பொழில் பரிமளம் பொருந்தி நாறிடுந்
தாம்பழி யுளரலாற் றகுதியோர் பிறர்
றோம்படி யவர்குறை நுவலுவார் களோ. (க)

நலத்தின் மிக்கார்சொலார் நயமில் சொல்லையே
சொலத்தகாப் பழிபிறர் மீது சொல்லுவோன்
குலத்தினு நலத்தினுங் குறையுளா னெனத்
தலத்தவன் வாய்மொழி சாட்சி யாகுமே. (உ)

உள்ளவங் கணங்கசிந் தோடல் போலொரு
கள்ள னெஞ்சினன் புறங்கழ றலன்னவ
னுள்ள மார்புரையெலா மொழுகி வாய்மொழி
வெள்ளமாய் வழிகின்ற விதத்தை மானுமே. (ங)

இன்னலே யேதிலார்க் கிழைக்கு மச்சொலே
முன்னமெய் யென்னினு முழுப்பொய் போலுமா
மன்னவர் குறையினை யறிந்துமின் றெனப்
பன்னுபொய் மெய்யினும் பாடுடைத்தரோ. (ச)

வேறு.

ஆட்சி யாமுல கரசன் முன்
சாட்சி சொல் சமை யத்தலான்
மாட்சி யோர் பிறர் மறுவினை
நீட்சியா நிகழ்த் தார் களே. (ரு)

மதியி லார் செய்வ டுவவ
ரெதிரி னின் றியம் பினு
* முதுகி னின்று மொழி வரோ
விதி யுணர்ந்த விபுதரே. (சா)

* முதுகு - புறம்.

வேறு.

ஒருவனொருவன் குறையை யுரைத்திடவே யதைக்கேட்டோர்
பெருக பத்தங்கலந்து பலபேர்க்குரைக்க விவ்வாறே
மருவியெங்கும் பரவுதலான், மண்ணின்முன்னந் தூறுமவன்
* குருனோ யொப்பானவனைக் கோனூர்விட் டகற்றனன்றே.

௨௧-ம், அதிகாரம் புறங்கூறல், முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம் ௨௧-க்குத் திருவிருத்தம், ௨௫0

---

௨௨-ம். அதிகாரம்.

## பெரியோரைத்தூறல்.

அரியகுணஞ் சேர்பெரியர் தமக்கமைக் கடல்சூழ்புவனமெங்
கும், விரியுமிசைமாசுற வவர்மேல் விளம்பும்பொய்ச்சொ ல
ண்டமிசை, இரியும்பானுக் கிரணமதைத் திரட்டிப்பற்றி யத
ன்மீது; கரியைப்பூச வேண்டுமெனக் கருதுந்தன்மை பொரு
வுமால். (௧)

காற்றினெதிரே நின்றொருவன் காறியுமிழு முச்சிட்ட,மாற்
றியவன் மேல்வந்து விழும்வாறுபோ லித்தாரணியிற், றேற்றி
யொழியும் வாழ்வதனைத் துறந்தமேலோர் மீதொருவன், றூற்
றிக்கூறும் வசைச்சொற்கள் சொன்னோன்மீதே தோயுமால்.

வேறு.

கடலனலுற் றெரிந்ததென்றுங் கதிர்குளிர்ரோ யுற்றதென்
றுந், தடவரையே சாய்ந்ததென்றுஞ் சாற்றுமொழி நம்புவ
ரார், திடமுடைய சான்றோர்மேற் செப்புமவ தூரதனைப்,
புடவிமிசை வாழறிஞர் பொய்யெனவே தள்ளுவரால். (௩)

வாய்கைக்கு நோயினர்க்கே மாமதுவுங் கைப்பாகுங், காய்
வெயிலு மஞ்சணிறங் காமாலைக் கண்ணருக்கே, சாய்நிழலுஞ்

* குரு - வருத்தம்.



சுடுவெயிலாந் தாபச்சுரத்தினர்க்கே, தீயவர்க்குத் தூயவருந்
தீயவர்போற் றோன்றுவரே. (௪)

கஞ்சனத்திற் றம்முகமே காணுவதுபோற் கயவர், தஞ்செ
யிரைப்பிறர் செயிர்போற் றுமெண்ணித் தூறுவரோர், வஞ்சு
கனைநம்பியொரு மாசிலாளின்ன லொடு, மெஞ்சலுறு வண்
ணம்வ ணிழிவுரைத்தன் முறையாமே. (௫)

௨௨-ம், அதிகாரம் பெரியோரைத்தூறல், முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௨௨-க்குத் திருவிருத்தம், ௨௫௫.

—o—

௨௩-ம். அதிகாரம்.

## உலோபம்.

பொன்னினைப் புதைத்திடப் புவியைத் தோண்டுவோ
றன்னிடந் தொட்டமண் டனையிழுத்தலர [ண்
லுன் னுடைய துநிதி யுலகமே யிம்ம
ணென்னுடை யதுவென வியம்பலொக்குமே. (௧)

பொன்னை மாநிலத்தில்யான் புதைக்கு மேல்வையி
னன்னையே யனையபா ரருளினோக்கி நற்
சொன்னமென் வாயிடைச் சொரியுமுன்றன் வாய்க்
கென்னையே யிடுவனென் றிசைத்திட் டாளரோ. (௨)

பொலிவளந் தங்கிய புவியிற்று னுண்டும்
பலிபிறர்க் கிட்டுமே பயன்றுவ் வான்பொருள்
வலியிலாப் பேடிகை வாள்கொலா ணென
வலியினை மேவிய * வரம்பையே கொலோ. (௩)

நித்திய மனுபவி யாது நீணிதி
பத்திரஞ் செய்குவோன் பாரந்தாங்க வூர்

* அரம்பை - தெய்வப்பெண்.

மத்தியிற் புதைத்தகன் மாசி றூசர்க்கு
வத்திரஞ் சுமக்கும்வா லேய மொப்பனே. (௪)

செல்லவோர் போக்கின்றிச் செறிந்த நீர்கன
வில்லமே யழித்தெழுந் தேகல்போற் செல [கொள்
வில்லையென் றடைத்தபொன் னெழுந்து தன்னைக்
புல்லரைக் குடிகெடுத் தகன்றுபோகுமே. (௫)

வேம்புதே னீயுமோ வெய்றண் ணுகுமோ
பாம்பமு தளிக்குமோ பரிவில் பூரியர்
தாம்பொதியா ளெனத் தாங்கும் பொன்னினைத்
தேம்புமா றுலர்க்குளஞ் சிறந்தளிப் பரோ. (௬)

ஈகையில்லாது பொன் னீட்டுவோன் கொண்ட
தோகையு மைந்தருந் தொலைகிலா னென
வோகையா யருவிட முணவி விட்டவன்
சாகையே கருதிமா தவஞ்செய் வார்களே. (௭)

வேறு.

அனுபவமொன்றே பொன்னுலாய நற்பயனஃ தின்றேற் [ன்
புனலிலாத் தடத்தைப்பெய்யாப் புயலினைப்பொருவு மப்பொ
றினமுமே நுகர்தலின்றித் * தீனர்க்கும் வழங்கலின்றித்
தனமதைக் காத்தனச்சுத் தருவினைக்காத்தல் போலாம். (௮)

வேறு.

மெலிய மேழைக் கிடாமல் விளைபொன்னை
மலியுஞ் செல்வர்க்கு வாரி வழங்குத
ன்லியி லார்க்கரு ணன்மருந் தும்பெரு
கொலிகடற் பெய்யுறை யையு மொக்குமே. (௯)

வனவி லங்கும்விண் வாழ் † பக்கியுந்தந்த
மினமோடன்றி யெடாதிரை யேழைகட்

* தீனர் - யாசிப்போர். † பக்கி - பறவை.



கனமிடாது தம்மாகம தோன்றையே
மனமுவந்து வளர்ப்பர் கயவரே. (௰)

வேறு.

தானற்கனி சிந்தாதுயர் தருவைச் சிலைகழியா
லூனப்படமோதிப் பழமுதிர்ப்பா ரெனவுலகிற்
றீனர்க்கு வழங்காதுறை தீயன்பசி யுளரான்
மானத்தை யிழந்தேபொருள் வவ்வப்படு வானே. (௰௧)

சாங்காலையோர் பிசினன்பொரு டானஞ்செய வுன்னித்
தேங்கான்மொழி மனைமைந்தரை விளித்தானவர் தெரிந்
யாங்காயவ னுரையாவித மவன்மேல் விழுந்தழுதார் [தே
தாங்காதவ னுயிர்தீர்ந்தனன் றனம்போற் புகையுளதோ.

௨௩-ம், அதிகாரம், உலோப, முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௨௩-க்குத் திருவிருத்தம், ௨௪௭.

---

௨௪-ம். அதிகாரம்.

## சோம்பல்.

---

சிற்றெறும் பாதியாச் சீவகோடி கண்
முற்றுமெய் யுழைத்துயிர் முறையிற் காக்குமால்
சற்றுமெய் யசைவிலாச் சழக்க ராருயி
ரற்றவோர் சவங்கொன் மற்றசரமே கொலோ. (௧)

விடக்குறுஞ் சடம்பல வேலை செய்தற்கா
நடக்கவு மோடவு நனியுறுப்பு கண்
மடக்கவு நீட்டவும் வாய்ந்ததாற் சும்மா
கிடக்குமெய்ச் சோம்புளோர் கேடுளார்களே. (௨)

தெளிவுற நூல்பல தினமும் வாசித்து
மிளிருடல் வருந்தியும் வெறுக்கை யீட்டிநற்

கிளிமொழி மனைவியைக் கிளைஞ ரைப்பல
வெளியரைத் தாங்குவோர்க் கில்லை மந்தமே. (௩)

வேறு.

மடிசேரு மவர்க்கொரு நாளு * மறல்
விடியாதவர் நெஞ்சிடை வெந்துயரே
குடியாகு மறந்தொடர் குற்றமெலா
நெடிதாக வளர்ந்திடு நிச்சயமே. (௪)

வேறு.

பாரெல்லாமாள் வேந்தருந்தூரோர் பண்பேோருஞ்
சீரெல்லாஞ்சூழ் செல்வருமந்தஞ் சேராரே
நேரில்லாமா பாதகர்தீனர் நெடுஞ்சோர
மூரெல்லாஞ்செய் துய்பவர்மாசோம் புடையாரால். ()

எய்யாவம்பே வல்லிசைமாறி யிறுமென்று
மொய்யாவிரத மாழியொடுங்கெட் டொழியுந்தம்
மெய்யானது வேலியர்வையுறப் பல்வினைகையாற்
செய்யாதவரே நோய்பலவுற்றுத் தேய்வாரே. (௬)

உச-ம், அதிகாரம், சோம்பல், முற்றுப்பெற்றது.
ஆக. அதிகாரம், உச-க்குத் திருவிருத்தம். உ௫௩.

---

உ௫-ம். அதிகாரம்.

## சினம்.

வலியரைச்சினப்போர் வரையினின்மோது மட்கலமென வுடைந்தழிவார், பொலிவுறத்தமையொப் பவர்களைச் சினப்போர் புலியிரண் டொன்றையொன்றடித்து, மெலிவொடுமிரண்டுங் கெடுவபோற்கெடுவார் மெலியரைவெகுளுவோர் வேங்கை, யெலியினையெதிர்த்த தன்மைபோலிழிவுற் றெரிநரகிடையமிழ்ந்துவரே. (க)

---

* மறல் - தரித்திரம்.



வேறு.

எம்மையுந் தெரியாம லிச்சினம் வந்ததென்பீ [பி
ரும்மைநோய் செயும்வலியரை வெகுண்டிடா தொளிப்
நிம்மைவாழ்விலா வெளியர்பாற் றினமுமக் கெய்தும்
வெம்மை நீரறிந்தோவறி யாமலோ விளம்பீர். (உ)

கண்சிவந்திட மெய்யெலா நடுங்கிடக் காலான்
மண்சிதைந்திட வுதைத்துநாக் கடித்திதழ் மடக்கி [ம்
வெண்சிதைந்திடச் சினங்கொள்வீர் நும்மெயோ டிதயு
புண்சுமந்த தலாற்பிறர்க் கென்குறை புகல்வீர். (௩)

* கோடவாண் முகஞ்சுழித்திதழ் மடித்தெழில் குலையச்
சேடன்மீதியான் சின்முற்ற பொழுதெதிர் திகழு[ர்த்துத்
மாடிநோக்க யானியான்கொன்மற் றுர்கொலென் றயி
தேடிநோக்கவோர் குரூபமேகண்டுளந் திகைத்தேன். ()

சினமுளோன் மனைமைந்தர்க ளவன்வெளிச் செல்லுந்
தினமெலாந் திரு விழவுகொண் டாடுவர்செல்லா
தினையன் றங்குநா ளிழவுகொண்டாடுவ ரிறப்பின்
மனையிலோர்பெரு மணவிழா வந்தென மகிழ்வார். (௫)

நாளு நாங்கொளுந் துயர்க்கெலாங் காரணநாடின்
மூளுஞ் சீற்றத்தின் விளைவதாமுனி வகமுடையோர்
தேளும் பாம்பும்வெஞ் சினவிலங்கினங்களு நனிவாழ்ந்
தாளுங் கானில்வாழ் பவரெனத்தினமஞ ரடைவார். (௬)

தளையுஞ் செல்வத்துட் பிறந்துநல்லோரவை சார்ந்து
பிழையிலுரலெலா முணர்ந்துநீ வைகலும் பிழைத்தா
யிழையுந்தீனராய்ப் பிறந்துகற்றிட வகை யில்லா
வுழையர் செய்பிழைக் காமுனிந்தனையி தென்னுளமே.

---

* கோட்ல் - கோணல்.

வேறு.

* பைதலே யெய்தலாகிப் பரன்செயலா மப்பைதல்
செய்தவர் தமைச்சினத்தல் சினவராதன்மேற் கல்லைப்
பெய்தவன் றனைவிட்டக்கல் பிளந்திடப்பொரலுங் கையா
லெய்தவன் றனைவிட்டம்பை முனிதலு மேய்க்குமாலோ. (அ)

உ௫ - ம், அதிகாரம், சினம், முற்றுப்பெற்றது. ஆக,
அதிகாரம், உ௫-க்குத் திருவிருத்தம், உகூக.

உகூ-ம். அதிகாரம்.

## பொருமை.

மாங்கனி வாயிற்கவ்வி மரத்திடை யிருக்குமந்தி
பாங்கர்நீர் நிழலைவேறோர் பழமுணுங்குரங்கென் றெண்ணித்
தாங்கரு மவாவிற்றாவிச் சலத்திடை யிறந்ததொப்ப
நீங்கரும் பொருமையுள்ளோர் நிலத்திடைக்கெடுவர் நெஞ்சே.

வேறு.

தாரணியி லெவரேனுந்துயருறிற் றன்றலையின் முடிதரித்த
தொப்பாஞ், சீரணியுஞ்செல்வமவர் பண்டக்கிற்றன் றுய்மனை
சேய் செத்ததொப்பாங், காரணமே யொன்றுமின்றிச் சுகது
க்கந்தன்வலியாற் கணத்துக்குள்ளே, பூரணமா வாக்கிடுவோ
ன் பொருமையுளோ னன்றியெவர் புவியின்கண்ணே. (உ)

வவ்விடலே முதலாயவினை யாலொவ்வோர் பயன்கைவந்
துகூடு, மவ்வினைகளியற்ற வெவ்வே றிடங்கருவிசமையமும்
வந் தமையவேண்டு, மெவ்விடத்து மெப்பொழுது மொழியா
மலெரியென்ன விதயந்தன்னைக், கவ்வியுண்ணு மவ்வியத்தா
ற்கடுகளவு பயனுள்தோ கருதுங்காலே. (௩)

வேறு.

ஆண்டெலாம் பிறராக்க நோக்கியே
மீண்டு மீண்டுநெட் டுயிர்ப்பு வீங்கினுந்

* பைதல் - துன்பம்.



தாண்டி யவர்தனந் தாழ்ந்துன் கைமிசை
யீண்டு சேருமோ விதயமே சொலாய். (௪)

மக்கள் பலருளார் மகிவிசால மாம்
பக்க மவர்தினம் படைப்பரோர்நல
மொக்க வதுபொரு றிள்ள நைந்திடிற்
றுக்க மோயுமோ சொல்லெ னெஞ்சமே. (௫)

நிறைய நீர்க்கசை வில்லை நீணிலத்
தறையுங் கல்வியி லறிவின் மேன்மையிற்
குறையு ளார்க்கலாற் கோதின் மாண்பினுக்
கிறைய மவ்விய மில்லை யில்லையே. (௬)

அறமு ளார்கள்போ லறிஞர்போற் புகழ்
பெற வருந்துதல் பெருமை யாயினும்
புறமு ளார்கள்போற் பொருளி லேமென
வுறுமவ் வுறுகணே யுறுக ணீயுமே. (௭)

வேறு.

பூட்டுமரி கண்டம் புனைந்தழுங்கு வார்போலுந்
தோட்டியினைத் தானே சுமந்துகெடுங் கயம்போலும்
வாட்டுந் துயர்கள் பலவைய மிசையிருக்கக்
கோட்டமுளோர் வேறு குலந்தமக்குண் டாக்குவரே. ()

உகூ-ம். அதிகாரம், பொருமை, முற்றுப்பெற்றது, ஆக
அதிகாரம், உகூ-க்குத் திருவிருத்தம். உகூகூ.

உஎ-ம். அதிகாரம்.

## வித்தியாகர்வம்

என்னநீவருந்திக் கவிபாடினுமெடுத்த கற்பனை முன்னோர்,
சொன்னதேயலா தொன்றிலைத் தொன்மைநூல்பல
வாகு முன்னோர்நூலெலாந் தந்தவனீயலை முற்றுணர்ந்தனை
யல்லை, யுன்னினுமிக்கவர் பலருளர்கல்வியாலுள்ளமே செருக்
கென்னே. (க)

வேறு.

பருத்திவிதைத்தெடுத்து நூலாக்கியாடைபண்ணி யளித்தா லுடுத்தல் பாரமாமோ, திருத்திமண்ணிற் செந்நெல்விதைத் தரிசியாக்கித் தீஞ்சோறட்டூட்டி லுண்ணச் செவ்வாய்நோமோ, வருத்தமொடு மிலக்கணங்களிலக்கியங்க ளரியநூல்பல்முன் னோ ரளித்தலாலே, கருத்தேயந் நூல்கள்சில கற்றுணர்ந்து கவிசொல்லல் வியப்பன்று கர்வமென்னே. (உ)

வேறு.

இயலொடு தமிழ்மூன்று மெள்ளளவுந் தேரா
யயர்வறு கலைஞான மறுபதினொடு நான்கும்
பயனொடு தேர்வாரே பலருள ரவர்முன்னீ
வெயிலின் முன்னிடுதீப மின்மினியா னெஞ்சே. (௩)

உஎ-ம். அதிகாரம், வித்தியாகர்வம், முற்றுப்பெற்றது. ஆக, அதிகாரம், உஎ-க்குத் திருவிருத்தம், உஎஉ.

---

உஅ-ம், அதிகாரம்.

## அழகாற்செருக்கல்.

எழிலுளேமெனச் செருக்குறுநெஞ்சமே யிழைதுகினீத்தங்கங் கழுவிடாதுற நோக்குதிமுகந்தனைக் கஞ்சனந்தனிநோக்கி னெழுநிலத்திடை யுன்னின்மிக்காருள ரெனவறிவாயீமத் தழியும்வெண்டலை யுன்றலைபோலிருந் தவணுற்றதறிவாயே. ()

வேறு.

தோற்போர்வை துறந்திறந்து கிடந்தவழகியைக்காணச் சுட லைசென்றோருங், கோற்போன்ற வெள்ளென்பின் குவையொன் றேகண்டனஞ்செங் குமுதவாயு, நூற்போன்ற விடையுமன் னடையுமணி தனமும்மதிநுதலும்வாய்ந்த, சேற்போன்ற விழியு ம்பான் மொழியுங்காணுமலுளந் திகைத்தோமன்னோ. (உ)



நோக்கதனிற் பீளையிருசெவிகளிலுங் குறும்பியன நுகர்வா யெச்சின், மூக்கதனிற் சளிதலையிற்பேன்வெயர்வை மலசல ங்கண் மூளுநாற்றம், போக்கவொரு நாட்கழுவா விடிலழுக்கு மிகத்திரண்டு புழுத்துநாறு, மாக்கமிலாத் தேகமிதையழகெ ன்னச் செருக்கலறியாமையாமே. (௩)

வேறு.

கட்புலன்றனையே கவர்ந்திடுகவினுளே மெனவனுதினம்
பெட்புறப்புவியிற் செருக்குதல்பெருமை யன்றெருளிர்பேருட
லுட்புறத்தினையே திருப்பிடிலோங்க லாமலக்காடுசூழ்
மட்புறச்சுவர் தீட்டுசித்திரமானு நம்மெழி னெஞ்சமே. (௪)

வேறு.

மண்ணிற்செய் பாவைமீது வயங்குபொற் பூச்சோதண்பூங்
கண்ணியை * மாற்றிற்சூடுங் காட்சியோ பழம்பாண்டத்திற்
பண்ணிய கோலமோநற் பண்பொடுஞானங் கல்வி
புண்ணிய மேதுமில்லான் பூண்டபேரெழி லுடம்பே. (௫)

உஅ-ம், அதிகாரம்,அழகாற்செருக்கல்,முற்றுப்பெற்றது. ஆக, அதிகாரம், உஅ-க்குத் திருவிருத்தம், உஎஎ.

---

உகூ-ம். அதிகாரம்.

## செல்வச்செருக்கு.

மணிகள்பல வகைக்கல்லாம் பொன்முதலு லோகமின்னு மண்ணுங்கட்டி, துணிபட்டாடைகள் பருத்தி நூல்பூச்சிக்கூடா நாயின் றேருலுரோம, மணிபுழுகுகத்தூரி முதலியபூனையின்ம லம் பாலாவிரத்தம்; தணிவிறேன் வண்டெச்சிலிவை செல்வ மெனச்செருக்கறுமோ நெஞ்சே. (க)

---

* மாறு - துடைப்பம்.

செங்கல்வெண்கல் கருங்கல்லை நவமணிகளெனச் செல்வர் சேர்ப்பார்யாமுஞ், செங்கல்வெண்கல் கருங்கல்லைச் சேர்த்திட்டோ மிருவர்கல்லுஞ் சீர்தூக்குங்கா, லங்கல்லே யிடைய திகமெங்களுமுன் னெதிர்ப்போரை நாசஞ்செய்யும், பங்கமுறச்செல்வர் நம்மின்மிக்கோரென் றகங்கரிக்கும் பான்மையென்னே. (௨)

வேறு.

இடையிற் கோவணமுமின்றி யிங்குதித்தோ மவ்வாறே
கடையினில் வெறுங்கையோடுங் கழிகுவ நடுவிற்சேருங் [கும்
முடைமையாற் பெருமையென்னோ வூர்க்கெலாம் பொதிசுமக்
விடைதருக் குற்றதென்ன வீண்செருக் குற்றாய்நெஞ்சே. (௩)

சுழல்சகடக்கால் போலுந் தோன்றியே யழிமின்போலு
மழன்மன வேசைபோலு மருநிதிமேவி நீங்கும்
பழமைபோ லதனைநம்பிப் பழியுறச் செருக்கன்மேக
நிழலினை நம்பிக்கைக்கொ ணெடுங்குடை நீத்தலொப்பே. (௪)

வேறு.

தரித்திரந் தரித்திர மென்னுந் தாரணி
சிரித்திடச் செல்வமே செல்வ மென்னுமிச்
சரித்திர முணர்ந்துமே தலையிற் பொன்னெமக்
குரித்தெனச் செருக்குத லரனன் றுள்ளமே. (௫)

நாசமாங் காலமே நண்ணு முன்னிற
கீசலுக் கெய்தலு மிரியு முன்னமே
தேசது மிகுத்தொளிர் தீபம்போலவு
நீசர்தஞ் செருக்கினு ணிதி யிழப்பரே. (௬)

வேறு.

செழித்திடு நாளினிற் செருக்குற்றாய்
கழித்துனை மாநிதிகை நீங்கிற்



பழித்திடு முலகின் முன்பரிவின்றி
விழித்திட லெப்படி வினை நெஞ்சே (௭)

உகூ-ம், அதிகாரம், செல்வச்செருக்கு, முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம், உகூ-க்குத் திருவிருத்தம், உ௮௪.

---

௩௰-ம். அதிகாரம்.

## தீயரைச் சேராமை.

செழுமல ரிடைமது சிறையளி நுகரு
முழுவிட மதுபெறு முனிவுடை யரவம்
பழுதறு மறநிலை பயிலுவர் சிலரே
வழுவய லவரிட மருவுவர் பலரே. (௧)

வேறு.

மணமனை சேர்மண மாலை மாண்புறும்
பிணவனத் தாரிழி வெய்தும் பெற்றியார்
கணமதிற் சேர்ந்தவர் கனங்கொண் டோங்குவர்
குணமிலா ரினமுறல் குறையுண் டாக்குமே. (௨)

மண்ணியல் பாற்குண மாறுந் தண்புனல்
கண்ணிய பொருண்மணங் கலந்து வீசுங்காற்
புண்ணிய ராதலும் புல்ல ராதலு
மண்ணினத் தியல்பென நவில லுண்மையே. (௩)

பாரினிற் பிறந்தபோ தெவரும் பண்பினுர்
பூரியரெனப் பெயர் பூண்டதில்லை யாற்
சீரிய ரென்னலுந் தீயரென்னலுஞ்
சேரினத் தியல்பினாற் சேர்ந்த நாமமே. (௪)

கயவரைச் சேர்ந்தவன் கலந்தபோ தவர்
செயலினை யெள்ளுவன் றினஞ் செலச்செல

மயன்மிகுந் தவர்செயன் மகிழ்ந்தனுட் டிப்ப
* னியவரைச் சேர்தல்போ லில்லைத் திமையே. ()

௯௰-ம், அதிகாரம், தீயரைச்சேராமை, முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௯௰-க்குந் திருவிருத்தம், ௨௮௯.

---

௯௧-ம். அதிகாரம்.

## பிழை பொறுத்தல்.

எப்பிழையா னீபிறரைச் சினந்தவர்க்கின் னாச்செய்ய வெண்ணினையோ, வப்பிழைநீ செய்திலையோ வுன்னைப்போலவர் பிழைக்க லாகாதோமா, வெப்பமுற நாணிலையோ நீயொருவன் பிழைசெய்ய வின்வேந்தன்கை, யொப்பமுட னதிகாரம் பெற்றனையோ மனமேநீ யுரைசெய்வாயே. (௧)

பிழையிலான் கடவுளன்றி மக்களிற்றப்பில்லார்தார் பிறருமுண்டோ, மழையினுமே யசனியுண்டு மதிக்குமோர்மறுவுண்டு மலர்க்குமுள்ளாங், கழையினுமே சக்கையுண்டு கனியினுந்தோல் கொட்டையுண்டு கதிக்குங்காம, விழைவினான் மறம்புரித னரர்க்கியல்பாதலினவரை வெறுக்கொணாதே. (௨)

நாவையே கடித்ததெனப் பற்றகர்க்கும்பேருளரோ நடக்கும்வேளை, பூவையேபொருவுகழல் சருக்கியதென் றதைக்களைவோர் புவியிலுண்டோ, காவையாருலகமெனும் பேருடலினவயவம் போற் கலந்தசீவர், தாவையேசெய்யினு மிக்கறிவுடையோர் கமைசெய்த றகுதியாமால். (௩)

உனையொருவ ரிகழ்ந்தனரே லேதுக்கா விகழ்ந்தனரென் றுன்னியுன்பாற், றினையளவு தப்புளதே லதைநீக்காய் தப்பின்றேற்சினமுறாதே, கனைகழையை வேம்பென்னிற் கழைக்குமோர் குறையுண்டோ கல்லின்மோதித், தனையுடைப்போர்

---

* இயவர் - கீழ்மக்கள்.



க்குணவுதருந் தேங்காய்போ லெவர்க்குநன்மை தனைச்செய்நெஞ்சே. (௪)

தீதொருவர் செய்தனரென் றதற்கெதிராய் நீயவர்க்கோர் தீங்குசெய்யிற், சாதுநீயவர் தீயரென்பதற் குக்கரியென்னச்சொல்லாதா, ரோதவிட முண்ணின் விழியுடையாரு முண்ணுவரோவுலப்பில் செந்நெல், சேதமுற வைத்தடுவோர்க் குணவாதல் போனலமே செய்வாய்நெஞ்சே. (௫)

நல்லவர் தீயவரென்னா தெவரையுமே புவிதாங்கு நனிநீர் நல்குஞ், செல்லருண னொளிபரப்புங் கால்வீசுமந்தரமுஞ் சேருமொப்பொன், றில்லாதான் றீயவர்க்கா விரங்கிமனுவேடமுற்றா னெனிலன்னார்பாற், செல்லாதுன் சினமனமே பொறுமையே பெருமையன்றோ செப்புங்காலே. (௬)

இன்னலெமக் கிழைத்ததனால்வீடிழந்து நரகாழ்வாரென நினைந்து, பன்னரிய பெரியர்பிழை பொறுப்பர்பொறார் தம்பிழையைப் பரமனாற்றான், முன்னொருவன் செய்தனனென் றவனுக்குச் செயுமிடரம் முறையிலான்சேய், பன்னிதமரையுஞ்சேரு மவர்நமக்கெப் பிழைசெய்தார் பகராய்நெஞ்சே. (௭)

௯௧-ம், அதிகாரம், பிழைபொறுத்தல், முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௯௧-க்குத் திருவிருத்தம், ௨௯௬.

---

௯௨-ம், அதிகாரம்.

## இனியசொற்கூறல்.

வட்டவுல கெட்டுமிசை மட்டற நிரப்பும்
வெட்டவரு துட்டரை விலக்கிவச மாக்கு
நட்டமிலை யெட்டனைய நட்டு நரரெல்லா
மிட்டமுறு கட்டுதவு மின்மொழிய தன்றோ. (௧)

இக்குவல யக்கணிழி வுக்கிடம தாகும்
பக்கரொடு மக்கள்பகை புக்கவழி பண்ணுந்
துக்கமும் விளைக்குமொரு துக்கமும் விளைக்குங்
குக்கனை நிகர்க்குமவர் கக்குமிழி கூற்றே. (உ)

சந்தநிறை செப்பிறைவை சாணமுள தென்னக்
கந்தம தெவர்க்குமினி காட்டிவிடல் போலு
நிந்தனையு ளாரினிய நீர்மையின ரென்ன
முந்தவவர் வாய்மொழி மொழிந்துவிடு மன்றே. (ங)

நன்மை புரியார்களு நயந்தவிர் கொடுஞ்சொ
லின்மையெனி னல்லவ ரெனப்புகழ் படைப்பா
ரின்மைபுரி யார்களும் வழங்குமுரை தீதேற்
புன்மையுறு தீயரென வெள்ளுமுயர் பூவே. (ச)

வன்மொழி யுரைக்கினெதிர் வன்மொழி கிடைக்கு
மின்மொழி யுரைக்கினரு மின்மொழி யெமக்கு
நன்மொழிக ளேபல விருக்க நவிலாமற்
புன்மொழி யுரைப்பவர்கள் பூரியர்க ளன்றே. (ரு)

ஙஉ-ம். அதிகாரம், இனியசொற்கூறல், முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ஙஉ-க்குத் திருவிருத்தம், ஙாக.

ஙங-ம், அதிகாரம்.

## பிறர்க்குத்தீங்குசெய்யாமை.

விடதரம் பற்றிவே ரொருவன் மேல்விடு
மடலுளோன் றன்னைமுன் னதக்க [illegible]
விடர்பிறர்க் கிழைத்திடு மியவன் றன்னைமு[illegible]
மிடலொடு மவ்விடர் மேவிச் சாடுமே. (க)

படியின் மா[illegible] புன்புளோரலாற்
கொடியரை நரரெனக் கூறல் பாரெலா



மிடியெனக் கொலைத்தொழி லியற்றுந் தீவெடிப்
பொடியினை மருந்தெனப் புகல லொக்குமே. (உ)

உரவுநீர்க் கருங்கட லுடுத்த பார்மிசைப்
பரர்வருந் திட்விடர் பண்ணுவோன் றனை
நரரெலாம் பகைசெய்வர் நண்ணு மாயிர
மரவுசூழ் கின்றவோர் தேரை யாவனே. (ங)

வேறு.

கயலிற் பாய்சிரல் கால்சிக்கிக் கொண்டெழ
வயமிலா துயிர் மாய்கின்ற தன்மைபோ
லயல வர்க்கழி வாகவோ ரந்தரஞ்
செய நினைத்தவர்க்கே வந்து சேருமே. (ச)

வேறு.

* புயகமதைத் தேள்புலியைப் பொல்லாத விலங்கையெலா
மயர்வாக வடித்தோட்ட லவைகள் குணத்தாலன்றே
வியல்பின்றி யெந்நாளு மேதிலார்க்கிட ரிழைக்குங்
கயவனையே வதடித்துக் காஞோட்ட னன்றுமே. (ரு)

ஙங-ம். அதிகாரம், பிறர்க்குத் தீங்குசெய்யாமை, முற்றுப்
பெற்றது. ஆக. அதிகாரம், ஙங-க்குத்
திருவிருத்தம், ஙாசு.

ஙச-ம், அதிகாரம்.

## நெடுந்துயில்.

விடியலிற்பறவை மிருகம்யாவுமுன் விரைந்தெழுந்துபல
வினைசெயுங், கடிமலர்ப் பொழில்கண் மலருமார்வமொடு கட
லெழுந்துகரை தாவிடும், படியின்மன்னுயிரெ லாமெழுந்து
தொழில் பலவியற்றிட வெழாமலே, தடியெனத்துயிலு வோ
னரன்கொலொரு தாவரங்கொலறி யேமரோ, (க)

* புயகம் - பாம்பு.

வேறு.

தங்கரு மங்கள்செய்யத் தனிப்பகல் போதாதென்ன
விங்கறி வுடையோர் தூங்கா ரிரவினு மூடர்துஞ்சக்
கங்குலும் போதாதென்னப் புகலுங்கண் படுவர்யாவும்
புங்கமாத் தேர்ந்துவேறோர் புரையிலார் போலுமாதோ. (௨)

வானுலா மருணனென்னு மக்களாயுளின் கணக்கன்
றுனெழு முன்னெழாரைச் சகத்திரக் கரத்தாற்றட்டு [வா
மேனெனவெழார் வாழ்நாளை யெண்குறைத் தெழுதிக்கொள்
ளுனதுகண்டு கால னவரிட மணுகுவானே. (௩)

௬௪-ம், அதிகாரம், நெடுந்துயில், முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௬௪-க்குத் திருவிருத்தம், ௬௱௯.

---

௬௫-ம், அதிகாரம்.

## பேருண்டி.

ரணிநிழல் புனல்கொள் பைங்கூழ் நாசமாமிகவேயுண்ணு
மினியமா மருந்துநஞ்சா மின்பமு மிகிற்றுன்பாகும்
பனிபிணி மடமைமர்தம் பழியெலாம் வம்மினென்னக்
கனிவொடு மழைக்குந்தூதாங் கழியபே ருண்டிமாதோ. (௧)

௬௫-ம், அதிகாரம், பேருண்டி, முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௬௫-க்குத் திருவிருத்தம், ௬௱௰.

௬௬-ம், அதிகாரம்.

## தற்புகழல்.

சடமதைக் கழுவவுன்னிச் சகதியிற் றோய்தல் போலுஞ்
சுடரினைத் தூண்டவேண்டி யூதியே தொலைத்தல்போலு
மடமையாற் றன்னைத்தானே புகழுவோன் வசைகளெல்லாம்
புடவியே யெடுத்துரைக்கப் பூணுவனிந்தை யம்மா. (௧)



வேறு.

தற்புகழ் வோன்றனைப் பழிக்குந் தாரணி
சொற்புகழ் விரும்பிடான் றனைத் துதித்திடு
நற்புகழ் பெறுவழி நன்னடக்கையோ
டற்பமுந் தற்புக ழாமை யாகுமே. (௨)

௬௬-ம். அதிகாரம், தற்புகழல், முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௬௬-க்குத் திருவிருத்தம். ௬௱௰௨.

---

௬௭-ம். அதிகாரம்.

## புகழுமிகழுமதியாமை.

தன்றுணை யிலானேயுள்ளத் தன்மையை யறிவான்பூமி
யின்றெரு வனைத்துதிக்கு மேசிடுமவனைப் பின்னு
நன்றினைத் தீதென்றுன்னுந் தீதைநன்றென்ன வுன்னும்
பொன்றும்மானிடர்புகழ்ச்சிபுனலின்மே லெழுத்துக்கொப்பே.

வசையுமீக் கூற்றுமற்றோர் வாய்வரு வாயுவல்லாற் [ணி
பசையுள தோவக்காற்றைப் பாரிலோர்பொருளென் றெண்
யிசையினுன் மகிழ்வும்பேசு மிகழ்வினுற் றுயருமுற்று
நசையினுற் கொல்லுநெஞ்ச நஞ்சமே யொக்குமாதோ. (௨)

சுணங்கனோர் பாற்குரைக்குஞ் சூழ்கரங் கத்துமோர்பாற், பி
ணங்கியே புள்ளொலிக்கும் பெரும்பறை யோர்பாலார்க்கு, மி
ணங்கியிவ் வொலிகளெல்லா மேற்கின்ற செவியோர்தீயன்,
குணங்கெடக் கூறும்வன்சொற் கொண்டிடிற் குறையென்
னெஞ்சே. (௩)

௬௭-ம், அதிகாரம் புகழுமிகழுமதியாமை, முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம் ௬௭-க்குத் திருவிருத்தம், ௬௱௰௫.

---

௬௮-ம். அதிகாரம்.

# ப ரோ ப கா ர ம்.

அனமிலார்க் கனமாய்வாழ வகமிலார்க் ககமாய்த்துன்ப, மனமுளார்க் குவப்பாய்நோயின் வருந்துவோர்க் கருமருந்தாய்த், தனமிலார்க் கரும்பொன்னாய்நற் றாய்தந்தையிலார்க்கன்னாரா, யினமிலார்க் கினமாயார்க்கும் யாவுமா யிசைதலன்பே. (௧)

அருந்தவே கூழும்பூணை வாடையும் வீடுமின்றி
வருந்துவோ ரெண்ணிலார்நம் மருங்குளா ரெனவறிந்தும்
விருந்திடாய் மணிமாடத்து மேவிநீ யொருவன்வாழப்
பொருந்தினாய் மனமேமக்கட் போலிநீ விலங்கானாயே. (௨)

ஏவல்செய்வோர்க்குக் கூலியிடைத் தகிலுணவாம் யாமோர்
காவல னெனினுஞ்சோறு கலையன்றி யொன்றுங்காணே
மாவலாய்ப் பொருளையீட்டி யயலவர்க் காச்சுமந்தோ
மீவதைமேற்கொண்டோமேலிணையில்வீடடைவோநெஞ்சே.

சாந்தமார் வறியர்போலத் தற்பரன் வருவானாவென்
றேந்துகை வீடுகொள்ளென் றேந்துகை யாமக்கையி, னீந்த
பொன் விலைப்போல்வீட்டுக் கிட்டபொன் னுமன்னரைக், காய்ந்
திலையென்போர்வேண்டோங்கதியென்பார்போலுமாதோ. ()

இரவலர் தம்மையெள்ளு மேழைகா ளியம்பக்கேளீர்
நரகை மோக்கத்தைவிற்க நண்ணிய வணிகரன்னார்
பரகதி யவரைத்தாங்கும் பண்பினார்க் கீவ * ரள்ளல்
கரவுளார்க் கீவரென்னி னவர்கதை கழறலென்னே. (௫)

பிறர்புகழினைக் கைம்மாற்றைப் பேணியே யுதவிசெய்வோ
ரறமுளா ரல்லர்நித்த னருட்குமே யுருகரல்லர்

* அள்ளல் - நரகம்.



திறவலக் கரஞ்செய்நன்றைத் திகழிடக் கரங்காணமல்
வறியர்பாத் திரமறிந்து வழங்குவோர் மாட்சியோரே. (௬)

மக்கடம் பொறையைத்தாங்கு மகிக்கு மன்னரைக்காக்க
மிக்கநீர் பொழியாநின்ற விண்முகிலினுக்குஞ் செய்யத்
தக்கவோ ரெதிர்நன் றுண்டோ சமயத்தோர் பயனும்வேண்டா
தொக்கவே செய்தநன்றி யுலகினும் பெரிதாமாதோ. (௭)

மன்னிய கனிகாய்நீழன் மற்றெலாமுதவிப் பின்னுந்
தன்னையு முதவாநின்ற தருவெனத் தங்கையார்ந்த
பொன்னெலா முதவிப்பின்னும் பூட்சியா லுழைத்திட்டேனு
மின்னுயி ருதவியேனு மிடுக்கண்டீர்ப்பார் நல்லோரே. (௮)

வேறு.

நூனுழைந்த நுவலருஞ் சீலர்தம்
பானுழைந்த படர்மதி யார்பிறர்
கானுழைந்த கடுவுந்தங் கண்ணின்வை
வேனுழைந்தென முன்னி மிறைப்பரே. (௯)

புறம் வருந்திடப் பூதவுடம்பினை
மறவுடம்பை வளர்ப்ப ரறிவிலா
ருறவிடும்பை யுருவண்ண மீந்துநல்
லறவுடம்பை வளர்ப்ப ரறிஞரே. (௰)

ஓடியெங்கு முலரும்பைங் கூழ்களை
நாடிமைமுகி னன்மழை பெய்தல்போல்
வாடினையும் வறிஞ ரிருக்கையைத்
தேடிமேலவர் செய்வ ருதவியே. (௰௧)

காரிடத் திரந் தேனுங் கயாதி
நீரினைப் பணை யெங்கு நிறைத்தல்போ
லாரிடத் திரந் தேனு மறமுளார்
பாரிடத்துப் பகுப்பர் வறிஞர்க்கே. (௰௨)

வேறு.

சாடுவெங் கோடையைத் தலையிற் றாங்கியு
மாடுளோர்க் கருநிழல் வழங்கு மாலெனக்
கேடுதம் பான்மிகக் கிளைக்கினுங் குணப்
பீடுளோர் நன்மையே பிறர்க்குச் செய்வரால். ()

இதமிலா வுலோபர்தம் பொருளை யெண்ணியே
மதமொடு நாடொறு மகிழ்வர் மேலவர்
பதவிதீர் மிடியர்க்குப் பரிவிற் றுஞ்செயு
முதவியை யுனுந்தொறு முளங் களிப்பரே. (௰௪)

காமமே வின்பங்கள் கணத்தி னீங்கிப்பின்
றீமையே விளைத்திடும் பிறர்க்குச் செய்கின்ற
சேமநல் லுதவியாற் சேருமின் பந்தா
னீமவீட் டின்பென நிகரு மற்றதே. (௰௫)

௩௮-ம். அதிகாரம், பரோபகாரம், முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம் ௩௮-க்குத் திருவிருத்தம், ௩௩௰.

---

௩௯-ம். அதிகாரம்.

## பொருளாசை யொழித்தல்.

என்பொரு ளென்பொருளென்று சீவன்விடுமண்மே யொ
ன்றியம்பக்கேளா, யுன்பொருளாஞ லதன்மே லுன்னுமம்
வரைந்துளதோ வுன்றனேடு, முன்பிறந்து வளர்ந்ததோ வி
ளியுனைவிட்டகலாதோ முதிர்ந்துநீதான், பின்பிறக்கும் போ
தது வுங் கூட்டிறந்திடுங்கொல்லோ பேசுவாயே. (௧)

ஒப்பருநற் குணத்தவர்க்குங் கொலைகாமங்கட் களவையுப
தேசிக்கு, மப்பனுய்நேயர்க்குட் பகைவிளைக்குஞ் சத்துருவா
யகிலத்துற்ற, செப்பரிய துயர்க்கெல்லா மாதாவாய்த்தீவினை



க்கோர் செவிலியாய, விப்பொருளை நற்பொருளென் றெப்ப
டிநீயொப்புகின்ற யேழைநெஞ்சே. (௨)

நோக்கிருந்து மந்தகராக் காதிருந்துஞ்செவிடரா நோயில்
லாத, வாக்கிருந்து மூங்கையரா மதியிருந்துமில்லாரா வளரு
ங்ககைகாற், போக்கிருந்து முடவரா வுயிரிருந்துமில்லாத பூட்
சியாரா, வாக்குமிந்தத் தனமதனை யாக்கமென் நினைத்தனைநீ
யகக்குரங்கே. (௩)

நிறைசெல்வ முடையாரை நோய்துன்ப மணுகாதோநினை
த்ததெல்லாங், குறையின்றிப் பெறுவரோ புவிக்கரசுசெ
லுத்துவரோ குறித்தவாயுள், பிறையென்ன வளருமோ விய
மன்வரவஞ்சுவனோ பேரின்பத்துக், குறையுளோ வவர்கிரக
மீதெலா மனமேநீ யுன்னுவாயே. (௪)

கனவதனிற் கண்டபொருள் செலவுக்காமோ குனிக்குங்
கங்குற்கூத்தி, லினரமைச்ச ரெனவேடம் புனைந்தவர்தம்
மாணையெங்கு மேகுமோவிண், கனமின்போ லொழியுமிந்தப்
புவிவாழ்வு நிலையென்னக் கருதிக்கோடி, நினைவுற்று யுடல்வீ
ழினென்செய்வா யறிவில்லா நெஞ்சக்கல்லே. (௫)

பஞ்சபூதங்களை விண்டாரகையைத் தண்மதியைப் பானுத
ன்னைக்,கொஞ்சமுநம் பொருளெனவுன் னுமல்வெள்ளிபொன்
னெனுமட் குப்பைதன்னைத், தஞ்சமாம் பொருளென்ன நினை
த்ததன்மே லாசையுற்றுத் தயங்குகின்றாய், நெஞ்சமே யுனை
ப்போலு மறிவீனர்தேடினுமிந் நிலத்திலுண்டோ. (௬)

பூதலநம் மில்லம்வான் மேற்பந்தர் சசிகதிர்மீன் பொற்றீப
ங்கள், சீதநீர்க்கடம் விருட்சாதிகணம் பூம்பொழி லுலகின்
செல்வமெல்லாம், வீதமா நமதுமக்கள் யாவருநஞ்சுற்றமென
வியந்துன்னுமற், பேதஞ்செய் துழல்கின்றாய் நெஞ்சமே
யுனைப்போலும் பித்தருண்டோ. (௭)

பூதமதி னென்றுமைத் தாங்குந்தா யொன்றுநாம் புசிக்கு
முண்டி, மாதரையி லொன்றுஞ்ச மையலாளொன்றெமக்கு
வளச்சாந் தாற்றி, பேதமின்றி மற்றொன்று நாமூரும்வாகன
மாம் பின்னுமாதி, நாதனே தந்தையெனிற் செல்வமிது போ
லுமுண்டோ நவிலாய்நெஞ்சே. (௮)

மண்டுபெருந் தனமிருந்துங் கண்டுமகிழுவதல்லான் மயல்
போன்முற்று, முண்டுவிட வொண்ணுமோ நினைவிற்கும் பஞ்
சமோ வுலகந்தன்னிற், கண்டபொரு ளத்தனையு நமதுசெல்
வரப்பொருளைக் காத்தெமக்குத், தொண்டுசெய்வோ ரெனவு
ன்னி மகிழ்வுற்றுற் றலைபோமோ சொல்லாய்நெஞ்சே. (௯)

எத்தனைபேர் கையின்முன மிப்பொருடா னிருந்ததவ ரெ
ல்லாந்தத்த, மத்தமெனநம்பினு ரவர்களைவிட் டகன்றுன்கை
யமர்ந்ததின்னுஞ், சத்தமின்றி யுனைமோசஞ் செய்தனந்தம்
பேர்கரத்திற் சாருஞ்சொன்னேன், சித்தமேயதுசெல்லு முன்
னீசற் பாத்திரத்திற் செலவிடாயே. (௰)

கதிரவனு லொளிரும்பல்வகைக் கல்லை மணியென்றுங் கா
மர்மண்ணை, நிதிவெள்ளி யுலோகமென்றும் பெயரிட்டும் வி
லையிட்டு நிகழம்மண்ணுற், சதியான காசுபணமெனச் செய்து
ந் தரையின்மிடி தனையமைத்தோர், மதியிலா நரரன்றிக் கட
வுளோ சொல்லுவாய் மருள்சேர்நெஞ்சே. (௰௧)

தரையெலா மெமதெனினு மிருப்பிடமோர்முழமே நற்று
ணியங்கள், வரையென்னக் குவிந்துகிடந்தாலுமுண்ப தரை
நாழி வளரவாவாற், றிரைகட லெலாம்பருக வுன்னுநா யென
வெமக்குத் தேவையில்லாக், கரையினிதி காணிதானியங்க
ணீ வேட்டதென்ன கருத்தேசொல்லாய். (௰௨)

பொலமிகவுள்ளார்க் குணவின் சுவையின்று பசியின்று பு
சிக்குமன்னம், அலமாயறு தோயாக் கவலைபிணி *பிடகர்ப

* பிடகர் - வைத்தியர்.



ல ருஇல்வேண்டும், பலருடலைத் தாங்கினுமோ சுமக்கரிதார்ப்
பகை பயமிப்பையுளெல்லா, மிலருறுக ளுளரெனிற் செல்வ
ரெவர் மிடியரெவ ரியம்பாய்நெஞ்சே. (௰௩)

௩௯-ம், அதிகாரம், பொருளாசையொழித்தல், முற்றுப்பெற்
றது. ஆக, அதிகாரம், ௩௯-க்குத் திருவிருத்தம், ௩௪௩.

---

## ௪0-ம். அதிகாரம்.

## சரீரநிலையாமை.

நெருநலோ வகன்றதின்று விடிந்துபக லாயிற்று நிமிடந்த
ன்னி; லருணனே யத்தமிப்ப னிசிவரும்பின் போமறுநா ளா
மிவ்வண்ண, வொருநாளாப் பலநாளாத் திங்களாவாண்டது
வா வுருவுகொண்டிங், கருநாளா மாயுளுள் கழிவதனையுணரா
யோ வவலநெஞ்சே. (௧)

வையாற்செய் புணைநம்பி யனலாழி கடக்கவுன்னு மதியி
லார்போற், பொய்யாற்செய் மெய்நம்பி யேதேதோ நினைவு
ற்றுய் புரைசேர்நெஞ்சே, பையவோர் புட்பிடிக்கக் ககனமி
சை வட்டமிடும் பருந்துபோல, வையோகூற் றுனைப்பிடிக்க
வற்றம்பார்த் தொளித்துநின்ற தறிகிலாயோ. (௨)

தினமும் * விரேசனங்கொளினு மோயாமன் மலமாரி திர
ளாப்பெய்யுங், கனம்போலுந் தேகமிதைப் பிரித்துநோக்கிடி
ன் மலநீர்கசியுஞ்செந்நீ, ரினமானதோலென்பு தசைநரம்பு
குடரன்றி யினிவேறுண்டோ, மனமேநீ யிதையுமொரு பொ
ருளென்ன வுன்னவென்ன மருளுற்றுயே. (௩)

மாடாடு விலங்கிறப்பிற் றசைமயிர்தோல் கொம்புதவு மட்
கலந்தா, னுடாக வுடையினென்றுக் குதவும்வீழ் மரங்கல்
லுமுபயோகந்தான், வீடானதிடியின்மேற் பொருளுதவுங்கா

* விரேசனம் - பேதி.

டழியின் விறகாமாய்க், கூடாகுந்தேகமிது வீழ்ந்தென்றற் குத வுநீ கூறாய்நெஞ்சே. (௪)

காடுசேர் மரஞ்செடிபார்த் தித்தனைநா ணிற்குமெனக் கணிக்கலாஞ்சீர், நாடுநீர்த் தடநோக்கி யித்தனைநாட் புனலென்ன நவிலலாமோர், வீடுதானித்தனைநா ணிற்குமென விளம்பலா மெய்யென்னும்பொய்க், கூடுதானித்தனைநா ணிற்குமெனப் புவியிலெவர் கூறற்பாலார். (௫)

நெல்லறுக்க வோர்கால மலர்கொய்ய வோர்கால நெடிய பாரக், கல்லறுக்க வோர்கால மரமறுக்க வோர்காலக் கணித முண்டு, வல்லரக்க னனையநம னினைத்தபோ தெல்லாநம்வா ழ்நாளென்னும், புல்லறுக்க வருவனெனி னெஞ்சமேமற்றி னியாம் புகல்வதென்னே. (௬)

முற்றியபின் கனியுதிரும் பழுப்புற்றுத் தழையுதிரு முழுது மேநெய், வற்றியபின் விளக்கவியு மென்னவோர் திடமுண்டு மக்கள்காயம், பற்றியவக் கருப்பத்தோ பிறக்கும்போதோ பாலப்பருவத்தோமூப், புற்றபின்போ வீழ்வதென நிலையின் றே விதன்பெருமை யுரைப்பதென்னே. (௭)

புகைவண்டி யூர்ந்துலகை நொடிக்குள்ளே சுற்றுவோம் புகைக்கூண்டேறிக், ககனமிசைப் பறவையெனப் பறப்போமோர் புகைக்கலத்தாற் கடல்கடப்போம், வகையாய் மின்னஞ்சலினா லெத்திசையுள்ளோ ரோடும் வார்த்தைசொல்வோ, மிகையான புதுமைசெய்வோ மரணமதை விலக்கறியோம் வியப்பீதன்றோ. (௮)

அண்டாண்டங் களின்றூர நிலையளவுகூறுவோ மருக்கன் றிங்கட், குண்டாகுங் கிராணமதை முன்சொலுவோங் கடி யாரத்துதவிகொண்டு, தண்டாதகாலத்தை யளவிடுவோ மின்னும்வெகு சமர்த்துஞ் செய்வோங், கொண்டாடுந் தேகமிது வீழ்காலமறிவதற்கோர் குறிப்பின்றம்மா. (௯)



மண்டலத்தா ருயிர்வாங்க நமன்கொண்ட வாயுதத்தின் வகுப்பைநோக்கிற், கொண்டலிடி மின்னீர்காலனன் மரங்கன் மண்ணோய் மீன்கொடியபுட்க ணாண்டிவிலங் கின்பதுன்பம் பகையச்சமூர்வனபே யுலகிலின்னுங், கண்டதெல்லா மவன் கையா யுதமென்னிற் றப்பும்வகை காணோநெஞ்சே. (௰)

விரியாழி நுண்மணலைத் தாரகையை யெண்ணிடினும் வீந் தோர்தம்மைச், சரியா வெண்ணிடத்தகுமோ வின்னமுநாங் கண்முன்னஞ் சாவோர்தம்மைத், தெரியாது போற்றினமும் வீண்காலங் கழிக்கின்றாய் திடமாயென்று, மரியாமையுற்ற னையோ வறியாமை பெற்றனையோ வழுத்தாய்நெஞ்சே. (௰௧)

அனமிகிலோ வாயுகுறை யிற்சூடுண்ணாவிடிலின் னாவிநீங் குங், கனமானவெய்யின்மழை பனியுதவா தவையின்றேற் கணநில்லாது, தினமுமாயிரங்கண்ட மிமைப்போதா கிலுமி தன்மேற் சிந்தையின்றேற், புனன்மொக்கு ளனவழியு நெஞ்சமே நாஞ்சுமக்கும் பூட்சிதானே. (௰௨)

பொன்றுநா ளின்னதென நிலையுண்டே லாழிசூழ் புவியோ ராயு, ளொன்றிரண்டு நாளெனினும் போதுநாருண் டென் றோ ருரையுண்டேனு, மின்றோ விக்கணமோ பின்னுறுங் கணமோ மாலையோ விரவோசாவ, தென்றோவென்றோ ருறு தியில்லாத வாயுளிதற் கென்செய்வோமே. (௰௩)

தொல்லுலகிற் புல்லிலையுண் ணாடுமுதலுயிர்களை நற்சுரபிப் பாலை, நெல்லுடன்பஃறானியத்தைக் காய்கனியைக் கிழங் கிலையை நிதமுமுண்டு, மல்லுறவே வளருமிந்தக் காயத்தை மரமென்று மாடாடென்றும், புல்லென்று நெல்லென்றுஞ் செடியென்றுங் கொடியென்றும் புகலலாமே. (௰௪)

ஆதியிற்புல்லிலை கனிகாய்த் தானியமாய் மீன்பறவை யா டுமாடாய், மேதினியி லிருந்துதாய் தந்தையுடற் சேர்ந்தொ ருநாள் வெளியேவர்தங், கோதியபண்டந்தின்று பெருத்திறந்

துபலசெந்துக் குணவாய்ப் * பஞ்ச, பூதியமாய் நாசமாய்ப்
போநெஞ்சே நாஞ்சுமக்கும் பூட்சிதானே. (௰௫)

எம்தேனு மெய்பிறக்குமுன் னெங்கிருந்த தின்னஞ்சிலகா
லத்தெங்கேசெல்லு, மமருயிர் நீங்கியபின்னோர் கணமுமனை
சேயரித னருகேநில்லார், தமர்சவமென் றெடுத்தெறிவார் ப
வைவிலங்கினங்கூடித் தத்திக்கொத்தி, யமர்செய்து புசிக்
தமப்போ தென்னென்று கேட்பவரா ரறிவினெஞ்சே. (௰௬)

௪0-ம். அதிகாரம், சரீரம்நிலையாமை, முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம் ௪0-க்குத் திருவிருத்தம், ௩௱௬௩.

---

௪௧-ம், அதிகாரம்,

## துன்பம்.

பாரில் யார்க்கும் பழங்கண் சக்சமாம்
வீரியங் கெட வெந்துயர்க் கஞ்சுதல்
போரி னேர்ந்தவன் பொன்றலுக் கஞ்சலு
நீரின் மீன்குளிர்க் கஞ்சலு நேருமே. (௧)

பிறந்த சேயுட் னேயழும் பீழைதான்
சிறந்த மாநிலஞ் சேர்ந்துபின் னுருயி
ரிறந்து போமள வுந்துய ரென்பதை
யறிந்து நீர்விட் டனுங்கலை யொக்குமே. (௨)

வேறு.

கோடிபொன் னுடையவ ரெனினுங் கோமுடி
சூடிய வேந்தரே யெனினுந் துன்பொடுங்
கூடிய வாழ்க்கைய ரன்றிக் கூறுங்கா
ணீடிய சுகமுளோர் நிலத்தி னில்லையே. (௩)

பாக்கிய நிலையெனும் பதகரோர் துயர்
தாக்கிடிற் பொறு துயிர் தன்னைப்போக்குவ

* பஞ்சபூதியம் - பிருதிவிமுதலிய வைவகைப்பூதங்கள்.



ராக்கிய வாக்கமு மனுரு மொன்றென
நோக்கிய சிலரை நோயென் செய்யுமே. (௪)

வேறு.

ஒளியினோடிரு ணிழலொடு வெயில்பொழி யுதகத்
துளியினோடுமின் னசனிமா மலையயுஞ் சுழற்றும்
வளியினோடிளந் தென்றலும் வருதல்போன் மாக்கள்
களியினோடருந் துயரமுங் கொள்ளுவர் கலந்தே. (௫)

உழுது புண்செயப் புன்செயு நன்செயா முயர்பொன்
முழுதுந்தீயினிற் சுடச்சுட வொளிருமான் மொழியும்
பழுதின்மாமணி தேய்பட வொளிமிகும் படர்கொண்
டழுதுநொந்தவர்க் கன்றி மற்றவர்க் கறமரிதே. (௬)

௪௧-ம், அதிகாரம், துன்பம், முற்றுப்பெற்றது.
ஆக. அதிகாரம், ௪௧-க்குத் திருவிருத்தம். ௩௱௬௯.

---

௪௨-ம். அதிகாரம்.

## அறஞ் செய்தல்.

பசிவந்த பின்னெல்லை விதைப்பதுபோல் வீட்டிற்றீ பற்றி
க்கொண்டு, நசியும்போ தகையவிக்கவாறு வெட்டல்போலும்
போர்நடக்குங்காலை, விசிகநூல்கற்கமுயல் வதுபோலுங் கப
மிஞ்சி விக்கிச்சிக்கி, யிசிவுகொண்டு சாங்காலத் தெப்படிநீ
யறம்புரிவா யிதயப்பேயே. (௧)

எத்தொழிலு முற்பழக்கமின்றி யெய்தாதறமென்னு மிணை
யொன்றில்லா, வத்தொழின் முற்பழக்கமின்றிச் சாங்காலத்
தமையுமோ வருமன்றற்கு, வத்திரம்வேண்டிற் பருத்தி வி
தைத்துமுன்ன நெய்யாமன் மணஞ்செய்காலத்,தொத்ததுகில்
வேண்டுமென வெத்தனைபேர் முயன்றுறு முறுமோநெஞ்சே.

சிற்பநூலிலக்கணநூல் வயித்தியநூன் மரக்கலநூல் செரு
நூலின்னம், பற்பலநூ லுணர்வதினும் புண்ணியநூ லரிதா

மோ பகரந்நூல்கள், கற்பதன்மூன் னரிதெனினும் பின்னெ
ளிதா மதுபோன்ற கருமமென்னு, மற்புதநூன் முயலுவோர்
க்கெளிதாகு மதையடைவா யறிவினெஞ்சே. (௩)

இனங்கள்செலச் செலவேதோ பெற்றதுபோன் மகிழுநெ
ஞ்சே தினங்களோடுங் கனங்கொளுமுன் னுயுளுள் கழிவது
ணராயுயிர்தீர் காயஞ்சேரும், வனங்கடுகி வாவென்ன விளித்
துன்பாற் றினநெருங்கும் வண்மையுன்னி, முனங்கொளறி
யாமையைநீ யினங்கொள்ளா தறஞ்செய்ய முயலுவாயே. ()

இன்றருஞ்ஞே தயங்கண்டோ முயர்ககன முகட்டின்மிசை
யிந்தப்பரனு, சென்றடைய நாங்காண்ப தையமதைக்காண
கினுமேற் றிசையிருக்குங், குன்றடையு மளவுநா முயிர்வா
ழ்வு தரிதன்முன் குறுகுங்கூற்ற, மென்றச்சத்துடன் மன
மே மறவாமலறவழியி னேகுவாயே. (௫)

சிற்றுதர * போஷணைக்கா மலையேறிக் கடல்கடந்து தேய
மெல்லாஞ், சுற்றியனுதின மலைவாய் நித்தியபே ரின்பசுக
தோயவேண்டிச், சற்றுமுடல் வருந்தலின்றி யலைதலின்றி
யோரிடத்தே தங்கிழுளும், பற்றினையே துறந்துசும்மா விருந்
தறஞ்செய் வதிலென்ன பாரநெஞ்சே. (௬)

கல்மூறுஞ் சிறுநீர் விரைவினிறையா விடினக் கலந்தா
ன்மிக்க, சலமூறி யமுந்துமது பேரற்பவத்தை விரைவுற்றுத்
தள்ளிடாம், னில்மீதியுர்ம்வாளா விருப்போமேற் பாவங்க
ணிறைந்துமோக்க, நலநீங்கி நரகமெனும் பேராழிதனில்வீழ்
ந்து, நலிவோநெஞ்சே. (௭)

பெருவெள்ளஞ் சேர்ந்தபின்ன ரதைத்திருப்ப வொண்ணு
மோ பெருந்துநீண்ட, தருவின்கோணலை நிமிர்க்கத் தருமோ
பாவங்களைநீ தள்ளிமேலாங், கருமந்தின் முயலென்றற பின
ணையாகட்டுமென்றுய் கசடுவிஞ்சி, யொருமலைபோ லான்பின்
னெவ் வாறதைநீ சாம்பருவத்தொழிப்பாய் நெஞ்சே. (அ)

* போஷணை = ஆதரிப்பு.



ஏதிலார் பொருளுேக்கி யிச்சையுறல் கவர்ந்த தொப்பா
மெழின் மின்னுளைக், காதலாய் நோக்குதலே கலந்ததொ
ப்பாம் பிறர் கேட்டைக் கருதலன்னுர், வேதையுறக் கொன்ற
தொப்பா மிவ்வாறேர் பயனின்றி மேவும்பாவ, மாதலினைம்
பொறிவழியே மனஞ் செலாதடக்கு வாரறிவுளோரே. (௯)

பரியூர்வோன் றனைமறந்து பரிக்குபசாரங் கண்மிகப் பண்
ணல் போலும், பெரியகடவுளைப் பணியாதாலயத்தை யலங்க
ரிக்கும் பித்தர் போலு, மரிய பொருள் வெளியிட்டுச் செப்பை
க்காத்திடல்போலு மான்மாவுக்கே,யுரியவறம் புரியாமலுடலை
நீ யோம்புகின்றுயுள்ளப்பேயே. (௰)

ஓருயிரீருடலென்ன நட்டமைந்தர் மாதர் நமதுயிர் நீங்கிற்
றம், மாருயிரைத்துறப்பரோ வழுவதுந்தம் முணவுவைக்க வ
மைந்த பாண்டம், பேருலகினுடைந்ததென வழுவதன்றி நம
க்கிரங்கும் பேரிங்குண்டோ, சாருமிவர் நேயத்தாற் பவஞ்செ
ய்து வீடிழத்த றகுமோநெஞ்சே. (௰௧)

வேறு.

உளதிலையென்ன வுரைப்பதேவருத்த முண்மைகூறிட வெ
ளிதாகுங், களவுகட்காமங் கொலைசெயல்வருத்தங் காவலன்
றண்ட மூர்ப்பகையா, முளமதைவருத்து மிகபரங்கெடுக்கு
முண்மையா வீதெலாமுன்னிற், களங்கர்பாவஞ் செய்தலே
கட்டங் கருதறஞ்செயலெளி தன்றே. (௰௨)

ஒருவனைப்புகிதாக் காணினுமவனே டுறவுசெய்யினும் பணி
கொளினும், பெருமையோன்றீய னெனவறியாமுன் பேசி
டார் தீயனேற்பெயர்வார், தருமநற்குணத்தைத் தீயரும்புகழ்
வார் சழக்கினைச் சழக்கருமிகழ்வா, ரிருமைநீரறத்தின் பெரு
மையுமறத்தி னிழிவுமீதுன்னுவாய் மனனே. (௰௩)

பலர்கழல்வருட மாதர்களாடிப் பாடவோர் பகலெல்லாமனி
ச்ச, மலரணைகிடத்தல் வருத்தமாமன்றே வார்த்த வெந்நீர்

பொரு வுடல, மலகறுகால் நரகவெந்தழலாழ்ந் தயர்வுறவொ
ண்ணுமோ வலியாப், புலவையேவிளைக்கும் பவத்தைவேரறு
த்துப் புண்ணியம் புரிந்திடாய்மனனே. (௰௪)

வேறு.

கூற்றுயர்க் கஞ்சுவாட்குச் சுதரிலைப் பயனொன்றில்லைக்
காற்றினுக் கஞ்சாநின்ற கலத்தினுக் கவிழ்தங்கைப்பென்
றேற்றிட வஞ்சினாரோக் கியமிலை யின்னற்கஞ்சிற்
சாற்றரு மறமுமில்லைத் தனிப்பரகதியு மின்றே. (௰௫)

இந்துமீன் பருதிபக்கி யினவிலங்கு கண்மரங்க
ளைந்துபூதங்க ளேனையாவுமோ வாதெஞ் ஞான்றுந்
தந்தொழில் செய்துவாழுந் தனியறம் புரிதலென்னு
நந்தொழில் புரிகிலேம்யா நாய்த்தொழி லுடையேநெஞ்சே. ()

௪௨-ம், அதிகாரம். அறஞ்செய்தல், முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௪௨-க்குத் திருவிருத்தம், ௩௮௧.

௪௩-ம். அதிகாரம்.

## கணிகையரியல்பு.

பூவையிவட் களித்தநிதி கணக்கிலையோர் கடன்காரன் புலி
போனம்மைச், சாவடிக்கே யிழுக்கமயிலே யிடர்தீ ரென்றி
வடன் றாளில்வீழ்ந்தோம், பூவில்வைத்த நிதியையோர் கிழப்
பூதங் காத்தினிய பூபாவுன்னைச், சீவபலியிடி னீவேயென்ன்
றதென்று ளென்செய்வா டெரிவைதானே. (௧)

நேரிழைநம் முடனிறப்ப னெனமுன்ன முரைசெய்தா ணி
ருபனம்மை, யீரவெனக் கொலைக்களத்திற் கிழுக்கவடிபற்றி
ப்பின் னிரங்கிவந்த, காரிகையை நோக்கினோ மிஞ்சியவோ
ர்கோவணத்தைக் கருதிவந்தே, னோருயிர்நம் மிருவர்க்குநீர்
வீயினுனிறந்த தொக்குமென்றாள். (௨)



மனைதாலிமுதல் வேசைக்கீந்துவே றொன்றுமின்றி மயங்
கும்வேளை, புனையவோரணியிலா திருந்தவில்லாள் கழுத்தினி
லோர் பொட்டைக்கண்டு, மனமகிழ்வுற் றேதென்றேன் பா
த்தையர்போலெனக்குமருள் வாய்க்கவேண்டி,யினமாப்பொ
ட்டணிந்து கொண்டு தாசியானேனென்ன வியம்பினாளே. (௩)

ஆவியனையாளையோர் பொழுதுபிரிந்தவ ளில்ல மணுகுங்
காலை, மேவுபாங்கியைக் கண்டாண் டுணையின்றி வருந்தின
ளோ மின்னாளென்றே, னாவிதனுக்குண்டோகாண் மயிர்ப்ப
ஞ்ச மலப்பஞ்ச நாய்க்குமுண்டோ, தேவிதனக்குண்டோ வா
ண்பஞ்சமென்று விதன்பொருளைத் தெரிகிலேனே. (௪)

செவ்வையுறு பொருள்கவர்ந்த பின்னரெனைக் கைவிட்
டேனைநோக்கிக், கொவ்வைவாய் மயிலேயிச் சினமேதென்
றேன் வனசக்கோயின்மேவு, மவ்வையைமுன் சேர்ந்தபி
ழை பொறுத்தவளை யென்னகத்துக் கழைத்தேனன்னா, டவ்
வையையு மருவினீ ரினிப்பொறேனென் றாடிச் சலங்கொண்
டாளே. (௫)

உண்ணும விரவலர்க்கு மீயாமற்பூமிதனி லொளித்தபொ
ன்னைக், கண்ணாளு டனக்கீயவேண்டியதைத் தோண்டுகின்ற
காலந்தன்னின், மண்ணாளு ளனைநோக்கி யெனக்கீந்த பொ
ருளையினி வாங்காநின்ற, பெண்ணாளு ளனையுன்வாய் கொ
ட்டுவ்வொன்றே நகைத்துப்பேசினாளே. (௬)

முன்னங்காலை வருடுமவள் கரங்கோல்போன் முதுகின்மேன்
மோதப்பூமே, லனங்கான மயிலென்ன நடஞ்செய்த கழ
னம்மே லாடித்தாக்கத், தினங்கான ரசமுதவுவாயேசி யுமி
ழவிந்தச் செய்கைகண்டு, மினங்காத லாயவளில் லேகுதி
யோநிற்றியோ வியம்பாய்நெஞ்சே. (௭)

ஆவலா லவகாலத் தவளின்னான் புகச்சிலபே ரங்கிருந்தி,
மேவியோ டினர்சினமுற் றிவராரென் றேன்மாமி விரைவா

ய்வந்து. பூவையிவணின் பிரிவாற்ருதழப்பாங் கியர்க்குனைப்
போற் புருடவேடந், தாவரவே தரித்தவட்குக் காட்டினன்
வேறன்றென்று சாதித்தாளே. (அ)

பொருளொன்று நாந்தந்த திவட்கதற்கில்லாமைபிணி பொ
ய்புரட்டு, மருளொன்றுங் கட்காமங் கொலைகளவு சூதுவசை
மரணத்தோடு, மிருளொன்று நரகமின்னு மிவள்பானுங்கொ
ண்டதற்கோ ரிலக்கமுண்டோ, தெருளொன்றும் பாரினம்
போற் சமர்த்தாக்கொண் டெவர்வணிகஞ் செய்யவல்லார். ()

இரதியனை யார்பாற்போய் நாம்வருமுன் னெங்குசென்ரு
யெனவில்லாளைப்,பொருதிவினவிட விரதிபுருடனனை யார்பா
ற்போய்ப் புணர்ந்தேனென்ருள், விரதமுள்ளா யெங்கிதைநீ
கற்றதென்ரே மும்மிடத்தும் விருப்பாயும்மைச், சுரதஞ்செ
ய்பவரிடத்துங் கற்றதென்ருள் வேறினிநாஞ் சொல்வதெ
ன்னே. (ய)

சுவையுணவு தானிருக்க மலந்தேடியோடுகின்ற சுணங்கன்
போலுங், குவையதனிற்கிடந்து நல்லிடநீங்கித் திரிகின்ற *
கோகுபோலு, நவைதீர் தண்ணதித்துநீ ரருந்தாதங் கணநீ
ரை நாடல்போலுஞ், சிவையனைய காந்தையரை வெறுத்தச
ட்ர்வேசையரைச் சேர்வர்மாதோ, (யக)

கோடுமுட்ன் மாமியெனை மதுவுடன்புலாறிருடிக் கொணர்
தியென்ருள், பாடுபெறும் பார்ப்பானுனென்றேன் மற்றவை
யுண்ணப் பவம்போமென்ரு, ளுடும்வசை யுயிருய்யேனென்
றேனீ மாய்ந்திடின்முன் ஞன்கொடுத்த, வோடுமற்ற மருகர்
க்கானான்றுக்கொள் ளெனக்கயிறென் றுதவினளே. (யஉ)

பசையறவெம் மாவியன்னுள் கைப்பொருளெலாம் பறிக்கப்ப
சியானன்கு, திசைமுகமு நோக்கலாற்றிசைமுகனு னேம்வா
யிற் றீயாளிட்ட, வசையானமண்ணுண்டு மாயனுனேங்கையி

* கோகு — கழுதை.



ன் வாங்குமோட்டா, லிசைமேவு மீசனுனேம்புவியி னமை
யொப்பா ரெவர்தாமம்மா. (யங)

விட்முண்டான் கூற்றுதைத்தா னலகைவென்ருன் புரமெ
ரித்தான் விடையோனென்னக், கடலுலகிற்சைவரவன் புக
ழ்விரிப்பார் கணிகையர்கட் கடுவையுண்டு. குடமுலையாங் கூ
ற்றுதைத்துத் தாய்க்கிழவி யெனும்பேயைக் கொன்றன்னுர்
வா. றிடமென்னும் புரமெரித்தா னெனில்யாமு மவன்புக
ழை யியம்புவோமே. (யச)

கொடியாளன் பற்றபின்னர். பலர் நம்பால் வந்துன்னைக்
கூடிக்கொண்ட, மிடியென்றும்வாழ்க வென்ரு ரேனென்றே
முயிர்க்கினியாள் வீட்டினீவந், தடிவைத்த போதெல்லாங்
கூடையுரி பரண் கட்டிலடியடுக்கு, நெடிய சிறை யிருந்தோ
மச்சிறையையுன்றன் வறுமை வந்து நீக்கிற்றென்ருர். (யரு)

தெரிவையினட்பறிவான் மாண்டெனக்கிடந்தே மாமிவந்த சி
லவை நோக்கி, யுரியபாடையிலிவனை யெடுமென்ருள் வீண்
செலவேனுலைந்தோர்காலிற், புரிவீக்கி யிழுமென்றன் னம்ப
ணித்தாளது செய்யப் புகுந்தோர்தம்மைத், தெரியாம லுயிர்
தப்பி யோடிவந்தோ மங்குறிலெஞ் சீவன் போமே (யசு)

சாமி யுனைப்பிரியே னென்றுரைத்துப் பின்னகன்ற மின்
னு டன்னைநோக்கித், தோமிலா நின்மாற்றந் திறம்பியதேதெ
ன்றேனீ தொகுப்பாற்றந்த, சாமியை நீங்கேனென்றே னு
னைச்சொன்ன தன்று நீசாமியானுற், பூமியிலுன் மாற்றென்
ன விடையென்ன விலையென்ன புகல்வாயென்ருள். (யஎ)

ஒருவனுண்ட கலத்துண்ண வொருவனுடையினை யுடுக்க
வொருவன் றூங்கும், திருவமளி துயிலமனம் பொருந்தாது ப
லரெச்சஞ் சேர்படிக்கம், பொருவுவேசியர்வா யெச்சிலையுண்
ணப் பலபேரைப் புணர்ந்தசுத்த, முருவுகொண்டா லனையவ
ர்தோள் சேரவேயெவர்க்குமன மொன்றுங்கொல்லோ. (யஅ)

பொருளின் சேடத்தையிவட் களித்தோம்வாய்ச் சேடமெ
னும் பொருளளித்தா, டருமனெனத் தனமளித்தோ மெமக்கி
வளுந்தருமனெனத்தனமளித்தா,ளருமையாம் பலியளித்தோ
மிவளெமக்கும் பலியளித்தா ளாழிசூழ்ந்த, விருநிலத்தினீதன்
றி யின்னுமிவ ளென் செய்வா ளெமக்குத்தானே. (௰௯)

கொலைஞர் தமைக் கொலை செய்து கள்வரை வெஞ்சிறையி
லிட்டுக் குற்றஞ் செய்யும், புலைஞரைத் தண்டித்தடக்கு நம்மி
ங்கிலீஷ்மன்னர் புருடராவிக், குலைவைக்குந் தன்மையளாய்ப்
பாதகமெலாந் திரண்டோ ருருவாய்வந்த. விலைமாதைக் கொ
ல்லாம லுலகத்திலேதுக்கா விடுத்தாரம்மா. (௨௰)

பணயமே திரணமன்பு பெரிதென்ற பாவைபொருள் பறித்
தபின்ன, ரணையேனென்றுளனங்க னுனக்கிலையோவென்றே
மவ் வறிவிலான்பூங், கணைகளையே விடுத்தனனஞ்சுவனோ
காணமெனுங் * கதிரங்கொண்டென், னிணைமுலைமேற் றெறி
த்திடின் வெல்வானென்றுளிவண்மனம்வல்லிரும்போவம்மா.

வடிவமிகு கொழுநர்தமை வேசியர்வவ்விட்டவருந்தும் வாட்
கணல்லீர், கடினமனங் கணக்கிலா வாடவர்சம்போக முயிர்
கவர்தல்வஞ்சங், குடிகெடுக்குந் தொழிலுங்கட் கில்லையென
வெறுத்தனரக் குணங்களெல்லாம், படியிலுமக் கமையுமேற்
கணவர்திரு வருளுமக்கும் பலிக்குமன்றே. (௨௨)

பகரும்வங்கம் பலசரக்குத் தரகுசெலவாள் கண்முதற் பண
ங்கூட்டின்றி, யகனிதம்பச் சரக்கொன்றைப் பலருக்குந்தின
ந்தினம்விற் றரும்பொன்வாங்கிப், புகலுமந்தச் சரக்குங்கை
நீங்காதுவணிகஞ்செய் பொதுமின்னார்போற், சகமதனிற்பே
ரறிவினோடு வாணிபஞ்செய்யுஞ் சமர்த்தருண்டோ. (௨௩)

கலவிசெய்த மாதென்னை விலைகேட்டாளுட னெக்கக்கல
ந்துகாம, நலமுண்டவுனக்கு விலையேதென்றேன் சவமனைய

* கதிரம் - பாணம்.



நான்சுகிக்க, விலையென்றாள் பொய்யென்றேன் வள்ளுவர்கூ
றியகுறளா மினியநூலில், விலைமாதைச் சேர்தல்பிணந் தழு
வியதையொக்கு மென்றார் வீணேயென்றாள். (௨௪)

தையலில்லம் புகும்போதென் சுதன்குரலைக் கேட்டொது
ங்கித் தாழ்வாரத்திற், பையவொன்றிச் செவிகொடுத்தேன்
பாலனைப்பார்த் தக்கோதை பணமீயென்று, னையனிறந் திடி
லெல்லா முனதென்று னவன்றூங்கு மமையம்பார்த்தோர்,
சையமெடுத் தவன்றலைமேற் போடுவாய் போடுமுன்னுன் ற
முவேனென்றாள். (௨௫)

ஒருமாது தன்றுணைவன் சீடனைமற் றொருமாதவ் வும்பர்
கோனை, யொருமாது சோதரரை வரைச்சேர்ந்து கன்னிய
ரென் றுயர்பேர்கொண்டா, ரருமையா வெமைச்சேயர் சோ
தரர்சீடரை யிம்பர்க் கரசைச்சேரும், பொருண்மாதக் கன்
னியர்க்கெலாஞ் சிரோமணியென்னப் புகலலாமே. (௨௬)

விதிமுதன் மூவரிலெவருன் கடவுளெனச் சிற்றிடையை
வினவப்பூவா, ளெதிரிறம னியனென்று ளரன்கோயிற் றுசி
யுனக் கியல்போவென்றே, னிதியுடன் மைந்தரைப்படைத்
தன்னு ரதையென்காலின்வைத்து நிதமும்வீழ, மதிபடைத்
துத் தமனியப்பேர் தான்படைத்த விதிக்கிணையார் மகிபவெ
ன்றாள். (௨௭)

அந்தமுளா ளுரிமையா வத்தமுளார் வாலியா வவன்பின்
றோன்றி, வந்தவனுனுயினேன் மூவரிலோரரியரியின் மகனை
யன்னாள், பந்தமுறச் செய்தனளம் மிருவரையார் சேர்த்து
வைப்பார் பாவாயென்றே, னைந்துலோகத்துளோ ரரிநமை
யோ ரரிசேர்க்கு மறிநீயென்றாள். (௨௮)

இனியாளை நோக்கியத்தை சக்கிரிக்குச் சொக்குத்தூ ளிடு
வாயென்ற, தொனிகேட்டுச் சினந்துநான் குயவனோ வெனை
மயக்கத் தூளோவென்றேன், றனியரசாஞ் சக்கிரிநீ யாகை

யினின் னடிமலர்தோய் தானமெல்லா, கனியேசொக் கெனுங்கனகப் பொடியிறையென் றேன்முனித னன்றேவென் றாள். (௨௧)

எனையன்றி மற்றோரைச்சேர்ந்தறியே னென்றகன்னி யிருதிங்கட்குட், டனையனின்றாள் புதுமை யென்னென்றே னினையும்மை தழுவியிச்சேய், சினையாயென் மதியிலிறந்தேனிகத்து முனைப்புணரச் செய்தநோன்பான், முனையல்கு மிருமாத நிறைந்துடனிம் மகவீன்றேன் முதல்வவென்றாள். (௩௰)

சிலர்மயில்வீடுற்றனரென் றறிந்துண்மை யறியவங்கு செல்லுங்காலை, புலனிழந்து நாறுண்டுங்கடந்தகூனுடன்மாமி பூபாமாரன், மலர்வாளி விடுத்தனன்சே ரெனையென்ன நெருங்கிவழி மறித்தாளப்பேய், கலவிதனக்கஞ்சி மீண்டோடினே னவள்கதையைக் கண்டிலேனே. (௩௧)

கைத்தனா மிழந்தபின்கூன் முடவரந்தகர் நோயர்கடைக்குலத்தர், நித்தமருவிடவுள்ள மூவந்தமின்னை நோக்கியிதுநெறியோவென்றே, மத்தமதிற்குருனேஞ் சாதியிழிவுளதோ வஃதளிப்போர்மேலோ, ரித்தரையிலெனக்கியார் கீழ்க்குலத்தர்சாதியிவை யிரண்டென்றாளே. (௩௨)

கனைகடன்மணலை யெணினும் வேசியர்சே ராடவர்க்கோர் கணிதமுண்டோ, வனையநீரளவிடினு மவருட்கொள் சுக்கிலத்துக் களவுண்டோவவ், வினையவர்மெய் யுரோமத்தை யெண்ணினுநோய்த்திரளெண்ண விதான்முண்டோ, யினையவரைச் சேர்தல்பெருந் தீயினிடைமூழ்குதலை யேய்க்குமாதோ. (௩௩)

விலைமகட்கென் றயலகத்திற் கன்னமிட்டுத் துளைவழியுள் விட்டதாளைக், கொலைவாளாற் றறித்தனர்கூ கூவென்றேன் வேசையென்பாற் குறுகியுக்கக், கலைசோதித் தொன்றுமிலாச் சினத்தாலவ் வகத்தாரைக் கதறிக்கள்வன், றலைதுமியுந் தாடுமித்தென் பலனென்றாள் வெருவியுடல் சாணுனேனே. ()



திருவெலாங் கொள்ளைகொண்டா டனைநோக்கிச் செவ்வதரத் தேனீயென்றேன், பெருவாயெச்சிலை யுமிழ்ந்தாள் பேசென்றேன் கொடுஞ்சொற்கள் பேசலுற்றாள், மருவென்றேனுதைத்துக் கையாலிடித்துக் கடித்தினிய மதனநூலா, மிருபாததாடனமா லிங்கனமெல் லிதழ்சுவைத்தா லென்றாளம்மா.

தரணியின்மிக் கெழின்மாதை யுனதுகுலதெய்வமெது சாற்றுயென்றே, னிரணியனென்றெய்வமென்றாள் விட்டுணுவோர் நரசிம்மமெனவேவந்தான், முரணுறவொண்ணுதென்றேனிரணியா சுரனன்று முராரிமெய்மேற், கிரணவுடை யெனப்புனைந்த விரணியனென் றெய்வ மென்றாள் கிளியன்னாளே. ()

பொய்யேந்து மனவேசைக் காத்திருடிக் கையிரண்டும் போக்கிக்கொண்டோ, மையேந்து விழிமனையாட் கிடையேந்துந்துகிலின்றி மானந்தன்னைக், கையேந்து மிரக்கவோ கையிலாளாறு ளெக்கையையேந்திச், செய்யேந்து மூலகத்திற் பலியேந்தியுண்ணுவ மியாஞ்செப்பாய்நெஞ்சே. (௩௭)

சேயிழையின் சேடியர்முன் னெமக்கிதஞ்செய் வான்புலிவெஞ்சினமாகோகு, நாயோரிகரடியெனக் கத்திமகிழ்விப்பர் நாகலிந்தபின்னத், தியவிலங்கினச்செய்கை நங்கண்ணேசெயத்தொடுத்தார் திருவையொப்பா, ளாயமிருகங்கட்கோ ரரசாறு ளவட்கிரைநா மாயினோமே. (௩௮)

வண்ணமல ரமளியின்மே லிருக்கையிலோர் பரபுருடன் வரவுநோக்கிப், பண்ணமரு மொழிமின்னாள் விளையாடல்போற்றன்கைப் பதுமத்தாலென், கண்ணதனை மூடிவிடேனென நகைத்தாள் வேற்றாளார் கள்ளீயென்றேன், கண்ணடிபோற்றிகழுமென்றன் கபோலமதி லுன்னுருவைக் கண்டாயென்றாள். (௩௯)

இரவினிலென் னுடன்றுயின்ற கோதையடிக் கடிவெளியே சென்மீண்டாள், கரவறிவான் பின்றொடர்ந்தேன் கொ

ல்லையிலோர் காளையொடுங் கலந்துநின்ரு, ளரவமெனச்சீறி யவ்வாண் மேல்வீழ்ந்துதாக்கவுயி ரற்றுவீழ்ந்த, வுருவையுற்று ப் பார்க்கவென்ற ஞெருசேயென் றறிந்துநெஞ்ச முருகி னேனே. (௪௰)

௪௩-ம், அதிகாரம், கணிகையரியல்பு, முற்றுப்பெற்றது.
ஆக, அதிகாரம், ௪௩-க்குத் திருவிருத்தம், ௬௨௧.

---

௪௪-ம், அதிகாரம்.

## விலங்கினத்துக்கிடர்செய்யாமை.

விலங்கினங் கட்குவாக்கும் வினையுணர் ஞானத்தோடு
நலங்களுமில்லை யென்ருலு நரரைப்போற் சீவன்மெய்யைம்
புலன்களு மின்பதுன்பப் புணர்ப்பறி நெஞ்சிஞேடுந்
துலங்கிடு விலங்கைவாட்டித் துயர்செய்வோர் நரகத்தாழ்வார்.

மானிடர் துயரைச்சொல்வர் மற்றுளோரதனைத் தீர்ப்ப
ரானவருறுநோய் நீக்க வனந்தமாம் பரிகாரங்கண்
மோனமா யிடுக்கண்டாங்கி முறையிட வறியாதல்லற்
ருனுறு விலங்கைக்கொல்வோன் றருமஞே பேயோவம்மா. ()

கொடிய வெவ்விலங்கை யெல்லாங் கோறலே மூறையெ ன்ருலு, மடிமை போனரர்க்குழைத் திண்டயர்விலங் கினை மாசில்லாக், குடிஞெுயை யடித்துதைத்துக் கொன்றுண்போ ர் சமயம்வாய்க்கிற், படியின்மாக்களையுமுண்பர் பழக்கம்போ ற்றீயதுண்டோ. (௩)

ஊமரைப் பித்துளாரை யுணர்வில் சேயரை மின்ஞரைப்
பாமரர் தம்மைமிக்க பரிவொடுங் காத்தல்போல
நாமற விலங்கைக் காப்பர் நல்லவரதைவருத்துந்
தீமன முடையோர் துன்பஞ் செய்வர்மானிடர்க்கு மம்மா. (



காயில்லை. கிழங்கேதக்க கறியதா மதனையுண்போ
ராயுஞுள் வளருமூழ்த்த லருந்துவோ ருயிர்கட்கெல்லாந்
தாயெனு மொருகருத்தன் சாபத்தைப்பரிப்பா ரென்னிற்
பேயினுங் கொடியவன்ஞர் பிழைக்குமா றெவன்கொலம்மா.

௪௪-ம், அதிகாரம், விலங்கினத்துக்கிடர்செய்யாமை, முற்று ப்பெற்றது. ஆக, அதிகாரம், ௪௪-க்குத் திருவிருத்தம், ௬௨௬

---

௪௫-ம். அதிகாரம்.

## பண்ணெறி.

### தன்னைத்தானறிதல்.

தன்னைத் தன்குணத் தன்மையைத் தேரவே
யுன்னு கின்றவ ஞேங்கிய நட்பிஞேர்
நன்ன யச்சொனம் பாமனள்ளார் தினம்
பன்னுமாற் றங்க ணம்பிற் பயனரோ, (௧)

### பெரியோ ரடக்கம்.

தேமலி சுவைக்கனி பலசெறிந்துயர்
காமரம் விளைதல்போற் கலையுணர்ந்திடு
தூமன மாட்சியோர் தொழுவர் யாரையும்
பாமர ரெவரையும் பணிந்தி டார்களே. (௨)

### இதுவுமது.

குலமணி வெளியுருதாழ் குரவையூ டொளித்திருக்குஞ்
சலமிசை யெவருங்காணச் சஞ்சரித்திடுந் துரும்பு
கலமென மானம்பூண்ட கலைவலோ ரடங்கிநிற்பர்
புலனில்சித்தையர்தமைத்தாம்புகழ்ந்தெங்குந்திரிவர்மாதோ.

### உபசரித்தல்.

எதிர்சென்று முகமன்கூறி யிருக்கையு நல்கியுண்டே
யதிசய மெனவிஞுவி யன்பொடு முகமலர்ந்து

துதிபுரிந் துபசரிக்குந் தொழிலினாற் செலவொன்றில்லை
யதிர்கட லுலகுளோர்த மன்பெலாம் வரவாமாதோ. (௪)

பெரியோர்சாதற் கஞ்சாமை.

அறப் பெருங்கட லன்னான்ற னடிமலர் காணவண்ண
மறைப்பதே யுடற்படாமா மரணத்தா லதனைப்பாரிற்
றுறப்பவர்க் குடனேயத்தன் சொரூபமே தோன்றலாலிங்
கிறப்பது பிறப்பினுந்தா னினிதற வர்க்குமாதோ. (௫)

நம்பிமோசம்போகாமை.

அத்திகு மூலகிற்சில்லோ ரகத்தொன்றும் வாக்கிலொன்றும்
வைத்திதஞ் சொலலாலியாவும் வனச்செவியேற்ப தன்றிச்
சத்தியமெனக் கொண்டேகல் சக்கினைமூடி நீண்ட
பித்திகை யேறிச்செல்லும் பேதைமை நிகர்க்குமாதோ. (௬)

பகைவர்க்குதவிசெய்தல்.

நள்ளார் தமக்குமென்று நன்றெமக் கியற்றுவோர்க்கு
முள்ளுவந் தியற்றுகின்ற வுதவிதா னரியதன்று
* புள்ளுவ மிழைக்காநின்ற பொருந்தலர்க் காற்றுநன்றி
விள்ளும் வீட்டின்பந்தன்னை விளைக்கின்றவித்தா நெஞ்சே. ()

உலோபர்பொருள்.

தமதென வுலோபரீட்டுந் தனத்தினைக் கொடுங்கோன்மன்ன
ரெமதென விருப்பர்கள்வ ரெமதென்பர் கிளைஞரெல்லா
முமதெம தெனவாதிப் புலகென தென்னும்யாமு
நமதென்போம் பாரந்தாங்கி நலிவதென் பிசினரம்மா. (௮)

நற்குணச்சிறப்பு.

விறலிகற்பதுவே கற்புகூனுடல் விருத்தைகற் பரிதன்று கலையெலா, மறவுணர்ந்ததக் கோர்நெறிலே நெறி † லஞ்ஞைகொண்டவ டக்கங்கதழ்வன்று, திறலினர் பொறையே

* புள்ளுவம் - வஞ்சகம். † அஞ்ஞை - அறிவிலான்.



பொறைகொஞ்சமுந் திறமிலார்தம் பொறுமைதலையன்று, மறலுளார்கொடையே கொடைசீரெலாம் வாய்த்த செல்வர் கொடைபெரிதன்றரோ. (௯)

கொடுஞ்சொற்கூறுமை.

உருமைமின் னினைத்தன்பாற் கொண்டுதகமன் னுயிர்க்கு நல்குங், கருமுகி லெனக்கண்ணலென் காணினுங் கேட்பினுஞ் சூழ், பருவரலேதி லார்க்குப் பயக்கும் வன்சொல்லைநீத்து, மருவிய நலங்கலந்த வசனமேபகர்வர் நல்லோர். (௰)

சமயமறிந்துபேசல்.

நதிமுதற் புகுவதெல்லா நன்ககட் டிடையடக்கு
மதிர்கட லெனவுமீயா ருத்தமஞ் சிகையேபோலும்
வதிசெவி நுழைவதெல்லா மனத்தினு ளடக்கித்தக்க
ததியறிந் துரைப்பதன்றிச் சகலர்க்கு முரையார்மிக்கோர். ()

மனோரம்மியம்.

பறவையும் விலங்குந்தினி பசித்தபின் றேடுநாளைக்
குறையெனுங் கவலையில்லை யுணவன்றி யிறந்ததில்லை
வறியரெம் மிற்பல்லோரிவ் வையகத்துளர்தே வீந்த
சிறிதுமேபெரிதென்றெண்ணிச்சிந்தையேமகிழ்ந்துகொள்ளே

வேதார்த்தம்.

ஈசனையே துதித்த லவன்றிருநாமத் தொடுதிருநா ளினைக்கொண்டாட, னேசமா ரனை தந்தைவணங்கல் கொலைசெய் யாமை நிதங்காமத்தை, நாசமாக்குதல் களவுபொய்நீக்கல் பிறனில்பொ னயந்திடாமை, மாசறுமிவ்விதி பத்தும்வேதாந் தமெனக்கடவுள் வகுத்திட்டானால். (௰௧)

இதுவுமது.

முன்னவன் பொற்பத முன்ன முன்னுந்
தன்னுயிரெனப் பலவு யிரைத்தாங்கலும்

## பன்னெறி.

பன்னெறியாவினும் பளகிலாவரு
நன்னெறியா மென நவிலும் வேதமே. (௰௪)

௪௫ம், அதிகாரம், பன்னெறி, முற்றுப்பெற்றது.

ஆக, அதிகாரம், ௪௫-க்குத் திருவிருத்தம், ௪௪௰.

~~~~~~

## வாழி.

ஆதிநூலென்றும் வாழ்க வநுநினங் தருமம் வாழ்க
வேதியர் நாளும் வாழ்க மெய்யடி யார்கள் வாழ்க
நீதிலாங்கிலேய மன்னர் செங்கோலெஞ் ஞான்றும் வாழ்க
நீதிநூல் படிப்போர் கேட்போர் நித்தமும் வாழ்கமாதோ.

நீதிநூல் முற்றிற்று.

---
~~~~~~